15-3-55

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

374
2-55

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 APR 1956
MADRAS



2 அணா

செய்திகள்

இலவசக் கல்வி

இந்த வருஷம் ஜூன் மாதம் பள்ளிகள் திறந்ததும் மூன்றும் படிவம் வரையுள்ள ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி யளிக்கச் சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். நூறு ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ளவர்களின் குழந்தைகளே ஏழை மாணவர்களாகக் கருதப்படுவார்கள். இதனால் சர்க்காருக்கு வருஷத்துக்கு ரூ. 50 லக்ஷம் செலவாகும் என்று தெரிகிறது. எஸ். எஸ். எல்., ஸி. வரை படிக்கும் குழந்தைகளுக்கும் இதே போன்ற சலுகை தரவேண்டும் என்று பலரும் கோருகிறார்கள். ரூ. 100-க்குமேல் ரூ. 150-க்குள் வருமானமுள்ள சாதாரணக் குடும்பத்தார்களுக்கும் இந்தச் சலுகை காட்டவேண்டும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள். படிக்கும் குழந்தைகள் அதிகமிருந் தால் இந்த வருமானம் உள்ள குடும்பங்களும் ஏழைக் குடும்பங்களாகவே தான் கருதப்படவேண்டும்.

கிரிக்கெட்

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஸிட்னியில் கடைசி டெஸ்ட் மாட்சு நடைபெற்றது. ஆட்டம் முதல் மூன்று நாட்களும் கடும் மழை காரணமாக நின்றுவிட்டது. நாலாவது நாள் ஆடத் தொடங்கிய இங்கிலாந்து கடைசி நாள் டீ நேரம் வரையில் ஆடி, ஏழு விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 317 ரன்கள் எடுத்தன. பிறகு டிக்ளேர் செய்துவிட்டு, ஆஸ்திரேலியாவை ஆடச் செய்தது. ஆட்ட முடிவில் 2 விக்கெட் நஷ்டத்துக்கு ஆஸ்திரேலியா 82 ரன்கள் எடுத்தது. ஆட்டம் டிராவாகியது. ஆஸ்திரேலியா கட்சியைச் சேர்ந்த லிண்ட் வால் இந்த டெஸ்ட் ஸீரீஸில் 100 விக்கெட்டுகள் எடுத்தது குறிப் பிடத் தக்கது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த கடைசி டெஸ்ட் மாட்சும் டிராவாகிவிட்டது. இந்த டெஸ்ட் கராச்சியில் நடை பெற்றது. முதலில் ஆடிய பாகிஸ்தான் 162 ரன்கள் எடுத்து ஆல் அவுட் டாகியது. இந்தியா 145 ரன்கள் எடுத்து ஆல் அவுட்டாகியது. இரண்டா வது இன்னிங்ஸில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 244 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்துகொண்டது. இந்தியா 2 விக்கெட்டு களுக்கு 69 ரன்கள் எடுத்தபோது ஆட்டம் முடிவுற்றது. இதைப்போல எந்த டெஸ்ட் மாட்சும் ஒரே டிராவாக இதுவரை ஆனதில்லையாம். இந்தியாவும் பாகிஸ்தானும் ஆடிய ஐந்து டெஸ்ட் மாட்சுகளும் டிரா வாக ஆனது ஒரு புதிய ரிகார்டை ஏற்படுத்திவிட்டதாம்.

சென்னையின் வெற்றி

சென்னையில் ராஞ்சி ட்ராபி செமி பைனல் மாட்சு சென்னைக் கோஷ்டிக்கும் வங்கக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்றது. கோபிநாத்தும் கிருபால்சிங்கும் அபாரமாக ஆடி எதிரிகளைத் திணற அடித்துவிட்டார்கள். சென்னை முதல் இன்னிங்ஸில் 347 ரன்கள் எடுத்தது வங்கம் 174 ரன்கள் எடுத்து ஆல் அவுட்டாகியது. சென்னை இரண்டாவது இன்னிங்ஸில் ஏமாந்துவிட்டது. 139 ரன்கள் எடுக்கப் பட்ட பாடு பெரும்பாடாகிவிட்டது. கிருபால்சிங்மட்டும் 97 ரன்கள் எடுக்காமல் இருந்தால் சென்னையின் மானம் கப்பலேறியிருக்கும். கோபி நாத் முதல் இன்னிங்ஸில் 125 ரன்கள் எடுத்தார். ஆனால் இரண்டாவதில் 5 ரன்களே எடுத்து அவுட்டாகிவிட்டார். முதல் இன்னிங்ஸில் 98 ரன்களும், இரண்டாவதில் 97 ரன்களும் எடுத்த கிருபால்ஸிங்குக்கு, 'சென்சரி போடும்படியான' அதிருஷ்டம் ஏற்படாதது எல்லாருக்கும் பெரிய குறைதான்! வங்கம் இரண்டாவது இன்னிங்ஸில் 155 ரன்கள் எடுத்து 157 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது.

கண்ணனில்

புது வருஷ

ஆரம்பத்தில்

புதிய தொடர்கதை

?

எதிர்பாருங்கள்

கண்ணன், மயிலாப்பூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 APR 1955
MADRAS

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 6

15-3-'55

குழந்தைகளே!	பக்கம் 2
லீடர் மணி	.. 3
அருமையான சம்பவம்	.. 7
வன ராஜ்யம்	.. 9
மர்மத் திருட்டு	.. 13
மாயப் பெட்டி	.. 18
பிள்ளையாரின் சக்தி	.. 22
கேளுங்கள் சொல்கிறேன்	26
பாரஸீக ரோஜா	.. 29
எங்கள் பகுதி	.. 31
பாலர் கவி அரங்கம்	.. 33
போட்டோ க்விஸ்	.. 34
சந்திரகிரிக்கோட்டை	.. 36
செய்திகள் - 2-ஆவது அட்டை	

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

இந்த இதழ் கண்ணன் விசேஷமானது. இதை நீங்கள் படித்துவிட்டு அலட்சியமாகக் கண்ட இடத்தில் போட்டுவிடக் கூடாது. படித்துவிட்டுப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அட்டையெல்லாம் வீணாகாமல் வைத்திருக்கவேண்டும். ஏன் தெரியுமா? இந்த இதழ் உங்களுக்கு அதிருஷ்டப் பரிசைத் தேடித் தரலாம்.

எப்படி என்பதை விவரமாகச் சொல்கிறேன். பொருளடக்கம் இருக்கிறதே, அந்தப் பக்கத்தைப் பாருங்கள். அங்கே ஒரு நம்பர் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி எல்லாக் கண்ணன் இதழ்களிலும் நம்பர் அச்சிடப்பட்டிருக்கும். அந்த நம்பர்களில் மொத்தம் பத்து நம்பர்களை நாங்கள் சீட்டுக் குலுக்கி எடுத்து விடுவோம். அந்த நம்பர்கள் எல்லாம் அதிருஷ்ட நம்பர்கள். அந்த அதிருஷ்ட நம்பருள்ள கண்ணன் உங்களிடம் இருந்தால் உங்களுக்கு நிச்சயம் ஒரு பரிசு உண்டு. இரண்டணா விலையுள்ள கண்ணன் உங்களுக்குப் பதினைந்து ரூபாய் வரையில் கிடைக்கும்படி செய்துவிடும். இது மார்ச்சு 15-ஆம் தேதி இதழ். ஏப்ரல் 15-ஆம் தேதி இதழில் இந்த அதிருஷ்ட நம்பர்களைக் கண்ணனில் பிரசுரிப்போம். அப்போது யார் யாரிடம் இந்த நம்பர்களுள்ள கண்ணன் இதழ்கள் இருக்கின்றனவோ அவர்கள் தங்கள் முழு விலாசத்தையும் தெளிவாக எழுதி, அந்தக் கண்ணன் இதழையும் எங்களுக்குத் தபாலில் அனுப்ப வேண்டும். உடனே அவர்களுக்குப் பரிசுப் பணத்தை நாங்கள் அனுப்பிவிடுவோம்.

இதே போல ஒவ்வோர் இதழிலும் நம்பர்கள் பிரசுரமாகும். ஓர் இதழ் விட்டு அடுத்த இதழில் அந்த அதிருஷ்ட நம்பர்களும் பிரசுரமாகும். அந்த நம்பர்கள் உள்ளவர்களுக்குப் பரிசுப் பணமும் கிடைக்கும். ஆகையினால் இனிமேல் உங்கள் கண்ணன் இதழ்களைப் படித்துவிட்டுக் கெட்டுப்போக்கி விடாதீர்கள். பத்திரப்படுத்தி வைத்திருங்கள். ஓர் இதழில் உங்களுக்குப் பரிசு கிடைக்காவிட்டால் இன்னோர் இதழில் உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கக்கூடும். அதனால் இரவல் கொடுப்பதுகூட நல்லதல்ல.

இது போட்டிப் பந்தயமல்ல. வழக்கமாகக் கண்ணன் வாங்கிப் படிக்கும் குழந்தைகளுக்கு ஊக்கமூட்டுவதற்காகவே இந்தப் பரிசுத் திட்டம். இந்தத் திட்டத்தின்படி ஒவ்வோர் இதழிலும் பத்துப் பேர்கள் நிச்சயமாகப் பரிசு பெறுவார்கள். ஒரு வருஷமெல்லாம் பணம் கொடுத்து வாங்கினாலும் நீங்கள் கண்ணனுக்காகச் செலவழிப்பது ரூ 4-தான். ஆனால் ஒரே இதழில் உங்களுக்குப் பதினைந்து ரூபாய் வரையில் கிடைத்துவிடலாம். கண்ணன் உங்களுடைய அபிமானத்தைப் பெற்றிருப்பது போலவே உங்களுக்குச் சிறந்த தோழனாகவும் இருக்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை. அதற்காகவே இந்தப் புதிய திட்டம்.

சந்திரகிரிக்கோட்டை அடுத்த இதழில் பூர்த்தி பெறுகிறது. புது வருஷப் பிறப்பிலிருந்து வேறொரு புதிய தொடர்கதை ஆரம்பமாகும். கதையின் பெயர், எழுதியவர் பெயர் முதலியவற்றை அடுத்த இதழில் காணலாம்.

பல குழந்தைகளுடைய வேண்டுகோளின்படி முன்பு கண்ணனில் தொடர்கதையாக வந்த அசட்டுப் பிச்சு இப்போது புத்தகமாகத் தயாராகிவிட்டது. அழகிய அட்டைப் படம். உள்ளே அங்கங்கே அருமையான படங்கள். ஏப்ரல் முதல் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

—ஆசிரியர்.



லீடர் மணி

'ஆர்வி'

மணி மயக்கம் போட்டுக் கீழே விழுந்ததைக் கண்ட அந்தப் பெண் பயந்து போனாள். ஆனாலும் உடனே உள்ளே போய் யாரிடமாவது சொல்வோம் என்று அவளுக்குத் தோன்றவில்லை. இப்படித்தான் சில குடும்பங்களில் பழக்கம். யாரோ, ஏதோ, நமக்கென்ன என்று போய்விடுவார்கள். யாராய் இருந்தால் என்ன, அவனும் நம்மைப்போல ஒரு மனிதன் தானே என்று பார்க்கமாட்டார்கள். அந்த வீட்டில் மற்றவர்கள் பார்ப்பார்களோ என்னவோ, அந்தப் பெண் பார்க்கவில்லை. அவள் அடுத்த பங்களாவில் இருக்கும் தன் தோழியை 'மாட்னி ஷோ'வுக்கு வருகிறாளா என்று கேட்கப் போய் விட்டாள்.

திரும்பி வரும்போதும் மணியைப் பார்த்து விட்டுத்தான் உள்ளே போனாள். அப்பொழுதும் அவள் யாரிடமும் போய் இதைச் சொல்லவில்லை. அவள் நேராக டெலிபோனை எடுத்து 'மாட்னி ஷோ'வுக்கு இரண்டு பால்கனி ஸீட்டுகளை ரிஸர்வ் செய்தாள். பத்து வயசாகவில்லையா? பணத்தை இப்படியெல்லாம் செலவழிக்க அவளுக்குத் தெரியாமல் இருக்குமா? வாசலில் அவளைப் போல ஒரு மனித ஜீவன், கேள்வி முறை யின்றி விழுந்து கிடப்பதைப்பற்றி அவளுக்குக் கவலையே ஏற்படவில்லை. அது அவளுடைய வீட்டு விஷயமில்லை; இன்னும் சொல்லப்போனால் அவளுடைய சொந்த விஷயமில்லை என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.

அவள் டிரஸ் செய்து கொள்வதிலும் டிபன் சாப்பிடுவதிலும் கவனமாகப் போய்விட்டாள். இரண்டு மணி நேரம் கழித்து வாசலிலிருந்து அவளுடைய அம்மா, "வஸந்தி! வஸந்தி!" என்று இரைந்து கூப்பிட்டாள்.

"ஆனந்தமென் சொல்வேனே" என்று ஒரு பாட்டை முணு முணுத்துக்கொண்டே வஸந்தி என்ற அந்தப் பெண் போர்ட்டிகோவுக்கு அருகில் வந்தாள்.

"கூப்பிட்டியா அம்மா?" என்றாள் அவள். மணி இன்னும் அங்கே விழுந்துகிடப்பதைப் பார்த்து விட்டு, "அடேடே! இன்னும் இவன் எழுந்திருக்க வில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"யார் வஸந்தி, இவன்?"

"யாரோ தெரியல்லியே; உன்னைத்தான் பார்க்க வந்தான். அப்புறம் திடீர்னு மயக்கம் அடிச்சு விழுந்துவிட்டான்!"

"ஏன் வஸந்தி, முந்தியே சொல்லப்படாதோ? பேசாமல் இருந்துட்டியே."

"நீதான் ரெஸ்ட் எடுத்துண்டிருந்தயே. உன்னை இதுக்காக எழுப்புவானேன்னு இருந்தேன்" என்றாள் வஸந்தி.

''சரி; சட்டுனு நம்ம டாக்டருக்குப் போன் பண்ணி உடனே வரச் சொல்லு! டிரைவரைக் கூப்பிட்டு இவனை ஒரு பெஞ்சியிலே படுக்கப் போடச் சொல்லு!''

''என்ன அம்மா இது? டிரைவர் இப்ப எனக்குக் கார் எடுத்துண்டு வரணுமே, நாங்க மாட்னிக்குப் போறோம், அம்மா!''

அவளுடைய அம்மா பெண்ணை எதிர்பார்க்காமல் தானே எழுந்து போய் டாக்டருக்குப் போன் செய்தாள். டிரைவரைக் கூப்பிட்டு ஒரு பெஞ்சியில் எடுத்து மணியைப் படுக்கச் செய்தாள்.

மணிக்குப் பிரக்ஞையே வரவில்லை. டிரைவர் அந்தப் பையனுடைய முகத்தில் பச்சைத் தண்ணீரை எடுத்துத் தெளித்தான். தலைக்கு உயரமாகத் தன் தலையணைகளைக் கொண்டுவந்து வைத்தான்.

''இந்தப் பையனை நான் பாலர் பவனத்திலே பார்த்தாப்பலே இருக்கே! இங்கே எப்படி வந்தான்? ஏதுக்கு வந்தான்? பாவம், பையன் பாக்கறதுக்கு நல்ல குடும்பத்துப் பையனாக இருப்பான் போலிருக்கே!'' என்று பரிதாபப் பட்டாள் அந்த அம்மாள்.

''பூம், பூம்ம்—''

டாக்டர் வந்தார். மணியை நன்றாகப் பரிசோதித்தார். முதல் உதவியெல்லாம் செய்தார்.

''பையன் யார்?''

''தெரியல்லே!''

''தெரிஞ்ச பையன் இல்லியா? அப்படித்தான் இருக்கும்னு நெனச்சேன். அவனுக்கு இது பசி மயக்கம். சாப்பிடவேயில்லை போலிருக்கு!''

முகத்தில் குளிர்ந்த காற்றும் தண்ணீரும் பட்டதும் மணி மெல்லக் கண் விழித்துப் பார்த்தான். அவனுக்குத் தான் எங்கே இருக்கிறோம், சுற்றிலும் இருப்பவர்கள் எல்லாரும் யார் என்பது ஒன்றுமே புரியவில்லை. அவன் கண்கள் மிரள மிரள விழித்தன.

''சூடாக ஒரு கப் ஓவல்டீன் இருந்தால் அவன் வாயில் ஊற்றுங்கள்'' என்றார் டாக்டர்.

ஓவல்டீனைச் சாப்பிட்டதும் மணிக்குச் சிறிது தெம்பு வந்தது. இருந்தாலும் எழுந்து உட்காரக் கூடிய சக்தி வரவில்லை. அந்தச் சமயத்தில் அங்கே வந்த ஒரு முகம் அவனுக்கு அறிமுகமான முகம் போலிருந்தது.

''என்ன அம்மா இங்கே?'' என்று கேட்டுக்கொண்டே ஓர் இளைஞன் அங்கே வந்து பார்த்தான். அந்தக் குரலும் அநேக





மாக அவன் கேட்டிருந்த குரல் தான். அவனுடைய அம்மா அவனிடம் நடந்ததைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

‘எங்கே பார்த்திருக்கிறோம்?’ என்று மணி மூளையைக் குழப்பிக் கொண்டான். மூளைக்குச் சிந்தித்துப் பார்க்கும் சக்தி இன்னும் உண்டாகவில்லை.

‘‘இனி ஒன்றும் பயமில்லை. அவனுக்கு இரண்டு நாள் கொஞ்சம் நல்ல ஆகாரமாகக் கொடுங்கள், சரியாகிவிடும்’’ என்று சொல்லிவிட்டு டாக்டர் போய் விட்டார்.

‘‘யார் வீட்டுப் பையனோ, என்னமோ! நாம் எப்படி நம்ப வீட்டிலே வைத்துக்கொள்ள முடியும்?’’ என்று அதே அம்மாள் தன்னையே கேட்டுக் கொள்வது போலச் சொல்லிக்கொண்டாள்.

‘‘யாராய் இருந்தால் என்ன அம்மா! இரண்டு நாள் இங்கே தான் இருக்கட்டுமே. அவனால் பேச முடிந்ததும் யார் என்ன என்று கேட்டு, அவன் வீட்டுக்குத் தகவல் கொடுத்தால் போச்சு. இது ஒரு பெரிய விஷயமா?’’ என்று அந்த இளைஞன் அடித்துப் பேசினான்.

மணி அந்த இளைஞனை மனமார வாழ்த்தினான். அவனை எழுந்து ஒரு முறை வணங்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

உடலில் சிறிது தெம்பு ஏற்பட்டதும் அவனுக்கு இப்போது மிகவும் களைப்பாக இருந்தது. மேலே சுற்றிய விசிறி அவன் கண்களைத் துயிலில் ஆழ்த்தியது. அவன் அப்படியே ஆழ்ந்த நித்திரை வசப்பட்டான்.

அவன் மீண்டும் கண் விழித்த போது அந்த ஹாலில் பிரகாசமாக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கடிகாரம் டிக்டிக் என்று ஏழு மணியைத் தாண்டி ஊர்ந்து கொண்டிருந்தது. அவனுடைய தலைமாட்டுக்கு அருகில் கிடந்த டீபாயில் ஒரு ரொட்டியும், ஒரு

கிண்ணத்தில் பாலும் மூடி வைக்கப்பட்டிருந்தன. மஞ்சள் மசேரென்று ஒரு பெரிய சாத்துக்குடி ஆரஞ்சும் இருந்தது.

மணிக்கு எங்கிருக்கிறோம் என்றே முதலில் நிதானப்படவில்லை. பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய ஞாபக சக்தி மீண்டு வரத் தொடங்கியது. மத்தியான்னம் நல்ல வெயிலில் ஒரு பங்களாவுக்குள் நுழைந்தது வரையில் ஒவ்வொன்றும் தெளிவாக ஞாபகத்துக்கு வந்தது. அதற்குமேல்தான் என்ன நடந்ததென்று அவனுக்குத் தெரியவில்லை. இப்பொழுது எந்த இடத்தில் படுத்திருக்கிறோம் என்பதும் புரியவில்லை. ஆஸ்பத்திரியாக இருக்குமோ என்று சந்தேகப்படும்படியும் அந்த இடம் இல்லை. எதிரே இருக்கும் ரொட்டி, பால் எல்லாம் யாருக்கு வைத்திருக்கிறார்களோ? அவன் அதைத் தொடலாமோ கூடாதோ? ஆனால் அவைகளை வைத்திருப்பதைப் பார்த்தால் எல்லாம் அவனுக்காகவே வைத்திருப்பதாகத்தான் தோன்றியது. இருந்தாலும் அவன் கூச்சப்பட்டுக் கொண்டு அவற்றைத் தொடாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

டக் டக்கென்று யாரோ மாடிப் படி இறங்கி வரும் சத்தம் கேட்டது. மணி மெல்லத் திரும்பிப் பார்த்தான். மாடிப் படியில் இறங்கி வந்த அந்த இளைஞன் அதே சமயத்தில் அவனைப் பார்த்தான். ''தம்பி! நீ முழிச்சுக் கொண்டாயா? உனக்குப் பசியாகயிருந்தால் அதோ வைத்திருக்கிறதே எல்லாம் உனக்குத்தான். வேறே ஏதாவது வேணுமானால் உள்ளே தாயியைக் கூப்பிட்டுக் கேள். பயப்படாதே, என்ன?'' என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் அவன் அருகில் வந்து தோள்பட்டையை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தான்.

மணி மரியாதை ததும்ப எழுந்திருக்கப் போனான். ''அடேடே, வேணும் தம்பி, நீ சும்மாப் படுத்திரு. எல்லாம் காலையிலே பாத்துக்கலாம். அதோ எதுத்தாப்பலே பாத்ரூம் இருக்கு. போய் முகத்தைக் கழுவிக் கொள். ரொட்டியையும் பாலையும் சாப்பிடு. உன் வீடு மாதிரியே பயமில்லாமல் இரு!'' என்று சொல்லிவிட்டுப் போன அந்த இளைஞன் உடனே திரும்பி வந்தான்.

''தம்பி, உங்க வீட்டுக்குச் சொல்லியனுப்ப வேணுமா? எங்கே உங்க வீடு! சொன்னியானா நான் சேதி சொல்லியனுப்பிடறேன்'' என்றான்.

''எனக்கு இந்த ஊரு இல்லே!'' என்றான் மணி. உடம்பிலே இன்னும் முழுத் தெம்பும் வரவில்லை. அதனால் பேச்சும் பலஹீனமாகவே வந்தது.

''என்னது? இந்த ஊரு இல்லியா? அப்போ..? சரி; எதுக்கும் நீ நல்லாப் படுத்துத் தூங்கு. நான் காலையிலே பேசிக்கறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனான். மணிக்கு உடனே சட்டென்று ஞாபகம் வந்துவிட்டது.

அவன் முன்பு புட்பால் கிரௌண்டில் சந்தித்த இளைஞன்தான். பைனுகுலர் என்றால் என்ன என்று அன்புடன் தனக்குச் சொன்னவன் இவனேதான்! ஆனால் அந்த இளைஞன் மணியைத் தெரிந்து கொண்டிருப்பானோ?

சிறிது நேரம் மணி இவ்விதம் ஏதேதோ யோசித்தபடியே உட்கார்ந்திருந்தான். பிறகு மெதுவாக நடந்து போய் முகம், கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்தான். அப்புறம் ரொட்டியையும் பாலையும் முடிந்த வரையில் சாப்பிட்டான். அதற்குப் பிறகுதான் அவனுக்குக் களையே நீங்கியது. இந்த ஆகாரம் இல்லாமல் அவன் வயிறு எப்படி ஏங்கிப் போய்விட்டது! அவன் குடல் என்ன வாட்டு வாட்டிவிட்டது! அதை எண்ணிப் பார்க்கவே மணிக்குக் குலை நடுங்கியது. தெரியாமலா பசி என்றால் எல்லாருமே இரக்கம் கொள்கிறார்கள்! பசி என்று வந்தவனுக்கு இருக்கும் பிடி அன்னத்தையாவது கொடு என்று ஏன் சொல்லுகிறார்கள்!

அவன் வாயும் வயிறும் அந்த இளைஞனையும் அவனுடைய தாயையும் வாழ்த்திக்கொண்டேயிருந்தன. பிறகு எப்பொழுது தூங்கினனே அவனுக்கே தெரியாது.

பசிமயக்கமும் உண்ட மயக்கமுமாகவே அன்றைப் பொழுது கழிந்து மறுநாள் மலர்ந்தது.

மணி அதிகாலையிலேயே கண் விழித்து விட்டான். சோர்வு என்ற பேச்சே அவனிடம் மருந்துக்கும் காணப்படவில்லை. அவன் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு எதிரே தெரிந்த முருகன் படத்தைக் கையெடுத்துக் கும்பிட்டு வணங்கினன். அவன் தலை நிமிர்ந்த போது அந்த வீட்டு அம்மாள், அதாவது முதல்நாள் காரில் வந்த அம்மாள் சிரித்துக்கொண்டே வந்தாள். "என்ன தம்பி! நேத்து எங்களை எல்லாரையும் ஒரே முட்டாப் பயப்படுத்திட்டியே! யாரு நீ? எல்லாம் விவரமாச் சொல்லு" என்று எதிரில் கிடந்த சோபாவில் உட்கார்ந்துகொண்டாள்.

மணி எல்லாவற்றையும் ஆதியோடு அந்தமாகச் சொன்னன். பொய் சொல்லவோ உண்மையை மறுத்துப் பேசவோ அவனுக்குத் தைரியம் வரவில்லை. இவ்வளவு உபகாரம் செய்த அம்மாளிடம் மறைத்துப் பேச யாருக்குத்தான் அந்த நிலையில் மனசு வரும்?

ஆனல் மணி ஒரு விஷயத்தை மட்டும் அடியோடு சொல்லவில்லை. அவனுடைய அத்தை வீட்டில் இருந்துகொண்டு படித்தானே அதை மட்டும் சொல்லவில்லை. ஏன் தெரியுமா? அதைச் சொன்னல் அந்த அம்மாளுக்கு அவன் மீது இரக்கம் ஏற்படாது என்று அவன் எண்ணினன். படிக்க ஓரிடம் கிடைத்தபோது கஷ்டமோ நஷ்டமோ அந்த இடத்தைவிட்டு எப்படியும் சொல்லிக்கொள்ளாமல் வருவது தப்பு என்று அவனுக்கே பட்டது. அதனல் அதைச் சொல்லாமல் சித்தியின் கொடுமை, அப்பாவின் பரிதாப நிலை, கங்கன் ந்து சென்னையைப் பற்றி

அருமையான சம்பவம்

காலை மணி 9 இருக்கும். ஆபீஸ் நேரம். பஸ்ஸில் ஒரே நெரிசல். நானே அவசரமாக டவுனுக்குச் செல்ல வேண்டும். க்யூவில் நின்று மெதுவாகப் பஸ்ஸில் ஏறி விட்டேன். எனக்குப் பின்னல் ஓர் உத்தியோகஸ்தர் சூட்டு, கோட்டு, டை-இவைகளை அணிந்துகொண்டு கையில் ஒரு லெதர் பையுடன் ஏறினர். என்னையும் தாண்டி முன்னே சென்று நின்ருர். இதற்குள் பஸ் கிளம்பி அடுத்த ஸ்டாப்பிங்கை நெருங்கிக்கொண்டிருந்தது.

அவருக்கு அருகே சீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்த ஒருவன் தன் இடத்தைவிட்டு எழுந்தான். அவன் ஒரு சாதாரண பேர்வழி. இடுப்பில் அழுக்கடைந்த வேஷ்டி. மேலே சிறிது கிழிந்திருந்த பாடி. அதன் மேலே மூன்று முழத்துண்டு.

அவனுடைய மரியாதையைக் கண்ட உத்தியோகஸ்தர், "பரவாயில்லை; உட்காரு" என்று சொல்லுவதற்குப் பதிலாக தலையை அசைத்தபடியே கையினல் சைகை செய்தார். அவன் பதில் பேசாமல் உட்கார்ந்து விட்டான்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் மறுமுறை அவன் எழுந்தான். இப்போதும் அந்த உத்தியோகஸ்தர், "பரவாயில்லை, நீ உட்காரலாம்: உட்காரு" என்று சொன்னர். அவன் ஏதோ சொல்ல எத்தனித்தான். ஆனல் பதில் கூருமல் மறுபடியும் உட்கார்ந்துவிட்டான்.

இதற்குள் பஸ் அந்த ஸ்டாப்பில் நின்றுவிட்டுக் கிளம்பும் நேரம்; அவன் திரும்பிப் பார்த்தான். உடனே அவன் எழுந்தான். அந்த உத்தியோகஸ்தர், "ஏன்?...." என்று ஆரம்பிக்கும் போதே, "சும்மா இருய்யா, போதும். நான் இறங்க வேண்டிய இடம் இதுதான்" என்று 'சிள்' என்று விழுந்துவிட்டு அவசர அவசரமாக இறங்கிப் போனன். அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

ரவீந்திரநாத், மதுரை.

ஆகாயப் புளுகாகப் புளுகி அழைத்து வந்தது, பிறகு அவனுடைய மணிபர்ஸைத் திருடிக் கொண்டு ஓடியது, நாலு நாளாகப் பட்டினி கிடந்தது, பாலர் பவனத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்க வந்தது, அங்கே அந்த அம்மாளைக் கண்டது, அப்புறம் அவர்கள் வீட்டுக்கு வந்தது, மயங்கி விழுந்தது—ஆகிய எல்லாவற்றையும் சொன்னான். அந்த அம்மாள் பாகாய்க் கரைந்து உருகிப் பரிதாபப் படும்படி மணி ஒவ்வொன்றாக வர்ணித்துச் சொன்னான். அந்த அம்மாளுக்கு உண்மையில் மணியினுடைய வரலாறு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. சில இடங்களில் மணி பட்ட கஷ்டங்களைக் கேட்டு அந்த அம்மாளின் கண்களில் கண்ணீர்கூடத் துளித்து விட்டது.

''ஐயோ பாவம்! ஐயோ!'' என்று நடுநடுவில் வாயைவிட்டுக்கூடச் சொன்னாள். இன்னொருவர் நமக்காக அநுதாபப்பட்டால் அதுவே நமக்கு மிகவும் ஆறுதலாக இருக்காதா? அப்படித்தான் மணிக்கும் இருந்தது. அதோடுகூட மறைந்து ஓடிப்போன தைரியமெல்லாம்கூட இப்போது ஏற்பட்டுவிட்டது.

ஒரே கோட்டில் வரைந்த படம்

''ஆமாம்; என்னை எதற்காகப் பார்க்க வந்தாய்?'' என்று கடைசியாகக் கேட்டாள் அந்த அம்மாள்.

''என்னவோ உங்களைப் பார்த்தால் என்னைக் காப்பாத்துவீர்கள் என்று தோணித்து. அதனால் உங்கள் வீடு தேடி, வெயிலில் நடக்க முடியாமல் நடந்து வந்தேன்!'' என்றான் மணி.

அந்த அம்மாளுக்கு ரொம்பவும் தர்ம சங்கடமாக இருந்தது. அவளுடைய முகத்தில் ஒரு புறம் பரிதாபமும், இன்னொருபுறம் வேதனையும் மாறி மாறித் தெரிந்தன.

''நீ வந்தது சரியப்பா. இந்தமட்டில் நீ பிழைத்தாய். ஆனால் எங்களால் எப்படியப்பா முழுவதும் உன்னை வைத்துக் காப்பாற்ற முடியும்? எங்கள் வீட்டுக்காரர் வந்தால் என்னைக் கோபித்துக்கொள்வாரே! அவருடைய சுபாவம் உனக்குத் தெரியாது. ரொம்பக் கோபக்காரர். நல்ல காலம்; நீ வந்திருக்கும் இந்தச் சமயத்தில் அவர் ஊரில் இல்லை. இருந்தால் உனக்கு ஏதோ காலோ அரையோ பணம் கொடுத்து உடனே போகச் சொல்லிவிடுவாரே! நான் என்ன பண்ணுவேன்?'' என்றாள்.

மணி சாஷ்டாங்கமாக அந்த அம்மாளின் காலில் விழுந்து, ''அம்மா! நீங்கள்தான் எனக்கு அம்மா. நான் தாயில்லாத பிள்ளை. ஆனால் இன்னிலேருந்து நீங்கள் தான் எனக்கு அம்மா. நான் ஏதாவது வேலைக்காரனாகவாவது இருக்கேன். என்னை மட்டும் போகச் சொல்லாதீங்கோ. என்னாலே மறுபடியும் பட்டினி கிடந்து, தெருவிலே அலைய முடியாது'' என்று கல்லும் கரைந்துருகக் கூறினான்.

அந்த அம்மாள் அதற்கு ஒன்றும் சொல்ல முடியாமல் சங்கடப்பட்டாள். ஆனால், ''டேய், என்ன படுத்துக்கொண்டு விட்டாய்! உம் உம்.. எழுந்திரு!'' என்று யாரோ கூறுவது கேட்டது. அந்த வீட்டுக்காரர்தான் வந்துவிட்டார்போலிருக்கிறது என்று எண்ணிய மணி தலையைத் தூக்கவேயில்லை.

(தொடரும்)

வன ராஜ்யம்

கே. கே. ராமன்

ஒரு காடு. அந்தக் காட்டிற்கு ராஜா, ஒரு சிங்கம். அந்தச் சிங்கத்தின் மனைவி ராணி சிங்கம் பல வருடங்களுக்கு முன்னரே இறந்துவிட்டது. ராஜா சிங்கம் மறு கல்யாணம் செய்து கொள்ள வில்லை. அதற்கு இரண்டு ஆண் குட்டிகள் இருந்தன. 'வேறு கல்யாணம் செய்துகொண்டால் குட்டிகள் மாற்றாந் தாயின் கொடுமைக்கு ஆளாகுமே' என்று ராஜா சிங்கம் எண்ணியது. காட்டின் பிரஜைகளும் மந்திரிகளும் ராஜாவைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி எவ்வளவோ சொல்லியும் 'முடியாது' என்று மறுத்து விட்டது.

குட்டிகள் வளர்ந்து வாலிபம் அடைந்தன. ராஜா, ''மூத்த குட்டிக்கு ராஜ்யத்தைப் பட்டம் கட்டிவிடவேண்டும். எனக்கோ வயது ஆகிவிட்டது'' என்று மந்திரியிடம் சொல்லியது. இதைக் கரடி மந்திரி ஒரு நாள் நரியிடம் சொல்லிற்று. நரி தந்திரமுள்ளது அல்லவா? அது ராஜாவின் சின்னக் குட்டியின் கூட்டாளி. அது ஒரு தந்திரம் செய்ய எண்ணியது.

''டேய், உன்னை ராஜா ஏமாற்றி விட்டார். உன் அண்ணனுக்குப் பட்டம் கொடுத்துவிட்டப் போகிறார்'' என்று நரி சின்னக் குட்டியிடம் சொல்லி, அதன் மனத்தில் பொறாமையை வளர்த்தது. அண்ணனிடம் அன்பாய் இருந்த சின்னக்குட்டி மாறிவிட்டது.

சின்னக்குட்டி ராஜாவிடம் போய், ''எனக்குத்தான் ராஜ்யத்தைத் தரவேண்டும் என்று சொல்லவே, மிருகங்களின் ராஜா யோசனை செய்தது. பிறகு அரச சபையில் இரண்டு இளவரசுச் சிங்கங்களையும் அழைத்து, ''உங்களில் யாருக்கு ராஜ்யம் வேண்டுமோ அவர்கள், தூர ராஜ்யங்களுக்குப் போய், ஒரு பெண் சிங்கத்தை அழைத்துக்கொண்டு வரவேண்டும். ராணியாக்கப் படுவதற்குத் தகுதி உள்ள அழகியாக அது இருக்கவேண்டும். அதைக் கல்யாணம் செய்வித்து, நாட்டையும் அந்தக் குட்டிக்கே தருவேன்'' என்றது.

சில தினங்களில் இரண்டு சிங்கக் குட்டிகளும் கிளம்பிவிட்டன. சின்னக்குட்டி தன் சகாவான நரியையும் அழைத்துக்கொண்டு போயிற்று. நரி, ''அரச பதவியை அடைவதற்கு உன் அண்ணா தடையாக இருக்கிறது. அதை ஒழித்துவிட்டால் சுலபமாகப் பதவியைப் பிடித்துக்கொள்ளலாம்'' என்றது.

சின்னக்குட்டி ராஜா ஆகிவிட்டால் அரசாங்கத்தில் ஒரு பொறுப்புள்ள பதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது நரியின் எண்ணம். அதற்காக இத்தனை தந்திரங்களையும் சின்னக்குட்டிக்கு நன்மை செய்வதுபோல் செய்து வந்தது. நரியின் கபடத்தைச் சின்னக்குட்டி அறியாது!

பல மாதங்கள் சென்றன.

நரியும் சின்ன யுவராஜாவும் பல காட்டு ராஜ்யங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு மணப் பெண் கிடைக்காமல் திரும்பி வந்து கொண்டிருந்தன. வரும் வழியில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. ஆல மரத்தின் அடியில் இரண்டு சிங்கங்கள் தூங்கிக்கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்ததும் இவை இரண்டும் ஆச்சரியப்பட்டன.

நரி, படுத்துறங்கும் சிங்கத்தின் அருகே சென்று அவைகளைப் பார்த்தது. பிறகு சின்ன யுவராஜாவிடம், ''அங்கே தூங்குவது ஓர்

டாக்டர்: ஹல்லோ! முதலியாரா?

முதலியார்: ஆமாம்.

டாக்டர்: நேத்து கொடுத்த மருந்து எப்படி இருக்கு? உடம்பு தேவலையா?

முதலியார்: தேவலை, ஸார்!

டாக்டர்: (ஞாபக மறதியாய்) தேவலைன்னுப் போதுமா? நாக்கை நீட்டுங்க, பாப்போம்!

முதலியார்: போனிலேயா நாக்கை நீட்டச் சொல்றீங்க?

பி.எஸ். பரமசிவன், சைதாப்பேட்டை.

ஆண் சிங்கமும் ஒரு பெண் சிங்கமுந்தான். நீ அந்த ஆண் சிங்கத்தைக் கொன்றுவிட்டால் பெண் சிங்கத்தை அபகரித்துக்கொண்டு போய்விடலாம். ராஜ்யம் உனக்குக் கிடைத்துவிடும்'' என்றது.

நரியின் யோசனைப்படி அந்தச் சிங்கங்களின் அருகே போய்ப் பார்த்தது சின்னச் சிங்கம். ''ஆ! என்ன! .. அவைகளில் ஒன்று அண்ணா சிங்கம்! அதைக் கொல்ல என்னால் முடியாது'' என்று சொன்னது சின்னச் சிங்கம் நரியிடம்.

''அப்படியாயின் உனக்கு ராஜ்டைக்காது.''

''ராஜ்யத்திற்காக ஆசைப்பட்டு அண்ணனைக் கொலையா செய்யச் சொல்கிறாய்!''

''யார் உன் அண்ணா?''

''அது என் அண்ணாதான்.''

''நான் கவனிக்கவில்லை. உன் அண்ணா என்றால் இன்னும் நன்மையாக முடிந்தது. எப்படியாவது கொன்று விடு.''

''ஐயய்யோ நான் மாட்டேன்!''

இப்படி அவைகள் பேசிக்கொண்டு இருக்கும் பொழுதே அந்த இரண்டு சிங்கங்களும் விழித்துக்கொண்டன. ஆண் சிங்கம் தம்பியைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்து நலம் விசாரித்தது. பெண் சிங்கத்துக்கும் அறிமுகம் செய்து வைத்தது. இஞ்சி தின்ற குரங்கைப் போல் விழித்துக் கொண்டு நின்றது நரி.

நால்வரும் புறப்பட்டுச் சிங்க ராஜாவின் ராஜ்யத்தை வந்து சேர்ந்தார்கள். சிங்க ராஜா மூத்த குட்டியை அன்போடு வரவழைத்து அணைத்துக்கொண்டது. இதை, நரி சின்ன யுவராஜாவுக்குக் குத்திக் காட்டியது. அது பேசாமல் இருந்தது.

நரி, சின்ன யுவ ராஜாவிடம் காதோடு ஏதோ ரகசியம் கூறியது. அது 'சரி' என்பது போல் தலையை வேகமாக ஆட்டியது.

மறு நாள்..

அரச சபையில் எள் போட்டால் விழ இடமில்லாமல் மிருகங்கள் வந்து சேர்ந்திருந்தன. எல்லாருக்கும் புதுச் சிங்கத்தைப் பார்க்க ஆசை. முதலில் ராஜா சிங்கமும் பின்னர் மூத்த யுவராஜாவும் ராணி சிங்கமும் வந்தது.

ராஜா, ''சபையோர்களே, பிரஜைகளே, இன்று நான் ராஜ்யம் யாருக்கு உரியது என்பதை உங்கள் முன்னால் அறிவிக்கப் போகிறேன். எனக்குப் பின்னால் பெரிய யுவராஜா பட்டத்திற்கு உரியது. அதன் ஆட்சியில் குறைவு வராமல் பார்த்து நல்ல பிரஜைகளாக வாழுங்கள்'' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தது.

கூட்டம் அமைதியாக இருந்தது. சிறிது நேரத்தில் ஏதோ ஓர் குரல் கேட்டது. கூட்டத்தின் மத்தியில் இருந்து சபையின் நடுவே வந்தது, நரி.

''இது மோசம். பட்டம் சின்ன துக்குத்தான்''

நரி கத்தியது. கூட்டத்தில் பர பரப்பு ஏற்பட்டது.

''ஏன்?'' என்று முதல் மந்திரி கரடி கேட்டது.

''சொல்கிறேன் கேளுங்கள். நானும் சின்ன யுவராஜாவும் பல ராஜ்யங்களுக்குப் போய் கஷ்டப் பட்டுத் தேடி அந்தப் பெண் சிங்கத் தைக் கொண்டு வந்தோம். வழியில் எங்களை ஏமாற்றி, பெண் சிங் கத்தை அபகரித்துக்கொண்டு விட்டது பெரியது.''

''இல்லை; பொய். பெரிய யுவ ராஜாதான் என்னை அழைத்துக் கொண்டு வந்தது'' என்று சபையே நடுங்கும்படிக் கத்தியது வந்த புதுச் சிங்கம்.

சின்ன யுவராஜா பேசாமல் இருந்தது. பெரிய யுவராஜாவின் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. கூட்டத்தில் மேலும் பரபரப்பு அதிகரித்தது.

''பெரிய குட்டியின் மீது அன் பாக இருக்கிறது புதுச் சிங்கம். அதனால்தான் அவ்வாறு சொல் கிறது'' என்றது நரி.

ராஜாவும் மந்திரியும் இந்தச் சிக்கலை எவ்வாறு தீர்ப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண் டிருந்தன.

''என்னைச் சிறியதுதான் அழைத் துக்கொண்டு வந்ததாகவே இருக் கட்டும். ராஜ்யத்தை ஆள்வதற் குப் பலசாலியான ராஜா தேவை. அதனால் இரண்டுக்கும் குத்துச் சண்டை விடுவது, எது அதில் ஜயிக்கிறதோ அதையே நான் கல்யாணம் செய்து கொள்வேன். அதுவே இந்த ராஜ்யத்துக்கும் ராஜா'' என்றது ராணி.

பெண்பார்க்க வந்த மாப்பிள்ளை: டேய் அம்பி உங்க அக்கா நல்லா பாடுவாளாடா?

அம்பி: ஓ! நல்லாப் பாடுவாளே! நேத்துகூட அடுத்த வீட்டுக்காரர்கள் எங்க அக்கா பாடறபோது நல்ல சகுனம்னு சொல்லிவிட்டு ஊருக்குப் போனார்கள்.

''சபாஷ், சரியான யோசனை. இப்படிப்பட்ட மருமகள்தான் ராணியாக வேண்டும். அதுதான் என் ஆசை'' என்றது ராஜா சிங்கம்.

நரிக்குச் சவுக்கால் அடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''சரி, அப்படியே ஒரு போட்டி ஏற்பாடு செய்யுங்கள்'' என்றது நரி.

''முடியாது; ஒரு ராஜ்யத்திற்காகப் பாசத்தையும் இழந்து தம்பியோடு சண்டை செய்ய என் மனம் ஒப்பவில்லை. இந்த ராஜ்யத்தைத் தம்பிக்கே கொடுத்துவிடுங்கள் அப்பா'' என்றது மூத்த யுவராஜா.

''சபையோர்களே, பார்த்தீர்களா! தன் தோல்வியை ஒப்புக் கொள்கிறது பெரியது. இப்படிப் பட்டது ஒரு பெண் சிங்கத்தைக் கொண்டு வர முடியுமா?'' என்று எள்ளி நகையாடியது நரி. கூட்டத்திலும் சில நகைத்தன.

''என்னையா கேலி செய்கிறாய்? சரி அப்படியே அமையுங்கள். இந்தக் காலத்தில் பாசமேது, பந்தமேது? நான் சண்டை செய்யத் தயார்.'' என்றது பெரிய சிங்கம்.

சண்டை செய்ய ஒரு நாளும் குறிப்பிட்டார்கள். இந்தச் செய்தி காட்டுத் தீ போலக் காடெங்கும் பரவியது.

குறிப்பிட்ட நாளும் வந்தது. சண்டை செய்வதற்கென்று பிரத்தியேக ஏற்பாடுகளும் தனி இடமும் ஏற்கெனவே தயாராய் அமைக்கப் பட்டிருந்தன.

அந்த நிகழ்ச்சியைப் பார்க்க ஏகப்பட்ட கூட்டம் கூடியது. குறிப்பிட்ட நேரத்தில் சண்டை துவங்கியது. முதல் வட்டத்திலேயே சின்னக்குட்டி சரியாக உதைகள் வாங்கியது. மறுபடியும் சண்டை செய்ய முடியாதபடி அதற்கு மூச்சு வாங்கியது.

''அண்ணா, சொல்வார் பேச்சைக் கேட்டுச் சண்டை செய்ய வந்தேன். என்னால் இனி சண்டை செய்ய முடியாது. என்னை மன்னியுங்கள்'' என்று சொல்லி, பெரிய சிங்கத்தின் கால்களில் விழுந்தது சின்னது.

இரண்டுமாக ஓடிப்போய் நரியைப் பிடித்துக்கொண்டன. அவ்வளவு பெரிய கூட்டத்தில் அதன் முகம், உடல் எல்லாம் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அதை ஊர்வலமாகக் கொண்டுவந்தன. மேலும் நரியின் நிலையை விவரிக்கத் தேவையில்லை.

பெரிய யுவராஜாவின் திருமணத்திற்குப் பல ராஜ்யங்களிலிருந்து மிருகங்களும் வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்தன.

என்ன போங்கள்! திருமணத்தன்று காலை வந்திருந்தவர்களுக்கெல்லாம் ஜிலேபி வழங்கினாரே சிங்க ராஜா! நான் போயிருந்தேனே! நீங்கள் போனீர்களா?

மர்மத் திருட்டு

எஸ். வி. கிருஷ்ணன்

இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் இருக்கும். அமாவாசை இருட்டு. எங்கும் பயங்கர அமைதி. ஆந்தைகளின் அலறலும் நாய்களின் குரைப்பும் இருட்டின் பயங்கரத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. ஜீப் கார் ஒன்று செட்டியாரின் பங்களா வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் ராஜன், நான் கைந்து போலீஸ்காரர்கள் பின் தொடர, பங்களாவினுள் நுழைந்தார். கீழ்த்தளத்தில் யாரையும் காணுததால் நேரே மாடிக்கு ஓடினுர். அங்கே கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. செட்டியார் பிரக்ஞையற்றுக் கட்டிலில் கிடந்தார். அவரைச் சுற்றி உட்கார்ந்திருந்த பெண்களின் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது. இன்ஸ்பெக்டரைக் கண்டதும் எல்லோரும் செட்டியாரைவிட்டுத் தள்ளி நின்றனர். ராஜன் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி செட்டியாரின் முகத்தில் தெளித்தார். மயக்கம் தெளிந்த செட்டியார் சிறிது நேரத்தில் கண் விழித்தார். தம்மைச் சுற்றிலும் போலீஸ்காரர்கள் நிற்பதைப் பார்த்துப் பயத்துடன், ''நீங்கள்..ஏன்..இங்கே வந்தீர்கள்?'' என்றுர்.

திகைப்படைந்த இன்ஸ்பெக்டர் ராஜன், ''ஏனு? சற்று முன் நீங்கள் தானே ஸ்டேஷனுக்குப் போன் செய்தீர்கள்?..இன்னும் மயக்கம் தெளியவில்லை போலிருக்கிறது'' என்று கூறிவிட்டு மெதுவாகச் சிரித்தார்.

செட்டியாரின் திகைப்பு இன்னும் அதிகமடைந்தது. ''இல்லை..இன்ஸ்பெக்டர்..நிச்சயமாக நான் போன் பண்ணவில்லை.. யாரோ வேண்டுமென்றுதான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறுர்கள். என்ன நடந்ததென்று போன் செய்தார்கள்?''

''மாணிக்கவேலு செட்டியார் வீட்டில் திருட்டுப் போய்விட்டது. உடனே வரவும்'' என்று தாங்கள் போன் செய்வதுபோல் செய்தார்கள். நிச்சயமாகத் தாங்கள் போன் செய்யவில்லையோ?..ஆச்சரியமாக இருக்கிறதே'' என்று கூறிக்கொண்டிருக்கும்போதே செட்டியார், ''ஐயோ..இன்ஸ்பெக்டர், என் பணமெல்லாம் போய்விட்டது ஸார். அதோ பாருங்கள்! பணப் பெட்டி திறந்து கிடக்கிறது'' என்று கத்தினுர்.

''வட்டிக்கு வட்டி வாங்கின பணம்தானே? போகட்டும்..அடியோடு போய்விட்டதா?'' என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டான் ஒரு போலீஸ்காரன்.

''பணம் திருட்டுப் போனதை இப்போதுதான் செட்டியார் கவனித்திருக்கிறுர்'' என்று நிச்சயம் செய்துகொண்டார் இன்ஸ்பெக்டர். உடனே போலீஸ்காரர்களுடன் வீட்டில் வேறு ஏதாவது விசேஷம் நடந்திருக்கிறதா என்று சோதனைபோட்டார். பிறகு செட்டியாருடன் சம்பாஷிக்கத் தொடங்கினுர்.

கும்பகோணத்தில் மாணிக்கவேலு செட்டியாரைத் தெரியாதவர்களே கிடையாது. செட்டியார் என்றுல் அவரையே குறிக்கும். அந்த வட்டாரத்திலேயே அவர் ஒரு பெரும் புள்ளி. அப்படிப்பட்டவர் வீட்டில் திருட்டு நடந்திருப்பது இன்ஸ்பெக்டருக்கே ஆச்சரியத்தை அளித்தது.

''என்ன செட்டியார்வாள்.. இங்கே நடந்தது உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? அப்படியானுல் உங்களுக்கு எப்படிப் பிரக்ஞை தவறியது? நடந்ததைச் சொல்லுங்கள், பார்ப்போம்..எப்

படியாவது தங்கள் சொத்தை மீட்க முயற்சி செய்கிறோம்..'' என்றார் இன்ஸ்பெக்டர்.

செட்டியார், ''என்னத்தைச் சொல்றது! ராத்திரி சாப்பிட்டு விட்டு எட்டு மணிக்கு மாடிக்கு வந்து கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தேன். நன்றாகத் தூங்கியும் விட்டேன். இரவு மணி பன்னிரண்டு இருக்கும். பங்களாவின் தோட்டத்திலிருந்து திடீரென்று பேய் சிரிப்பது போன்ற பயங்கரச் சத்தம் கேட்டது. கண் விழித்துக் கொண்டேன். எங்கே பார்த்தாலும் ஒரே இருட்டு. படுக்கையை விட்டு எழுந்து சுற்று முற்றும் பார்த்தேன். ஒன்றுமே தெரியவில்லை. வீண் பிரமைதானே என்று மறுபடியும் படுத்துக் கொண்டேன். அவ்வளவுதான்; மறுபடியும் முன்மாதிரி பயங்கரச் சத்தம் கேட்டது. முன்பு கேட்ட சத்தத்தைவிடப் பயங்கரமாகவும், அதிகச் சத்தமாகவும் இருந்தது. உடனே கட்டிலை விட்டு எழுந்து வராந்தாவில் போய் எட்டிப் பார்த்தேன். பங்களாவின் தோட்டத்திலிருந்துதான் அந்தப் பயங்கரச் சத்தம் வந்துகொண்டிருந்தது. ஆனால் தலை நிமிர்ந்து பார்த்தபோது என் உயிர் என்னிடமே இல்லை - ஏனென்று கேட்கிறீர்களா?

''நான் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து இருபதடி தூரத்தில் ஒரு மண்டை ஓடு பயங்கரமாகக் காட்சியளித்தது. எப்படி இருக்கும் எனக்கு!..பயங்கரமான அந்த இருட்டில் இரவு பன்னிரண்டு மணிக்கு மேலே ஒரு மண்டை ஓடு அந்தரமாக நிற்பதைப் பார்த்தால் யாருக்குத்தான் பயமாக இருக்காது? மேலும் அது பேய்ச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு என்னை நோக்கி வரவும் ஆரம்பித்து விட்டது. அவ்வளவுதான்; நான் ஏதோ ஒரு புது உலகத்துக்குச் சென்றுகொண்டிருப்பதுபோலத் தோன்றியது. மயக்கமாய்த் தலை சுற்றக் கீழே விழுந்தவன்தான். அப்புறம் உங்களைத்தான் இப்போது பார்க்கிறேன். அப்பப்பா! இப்போது நினைத்தாலும் மயிர் சிலிர்க்கிறது. இன்ஸ்பெக்டர்.. இதுதான் ஸார், எனக்குத் தெரியும். நான் போன் பண்ணவில்லை.. திருடர்கள் பணத்தையும் எடுத்துக் கொண்டு போலீஸுக்குத் தகவலும் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இவர்கள் ஏதோ மர்மத் திருடர்கள்தான்! சந்தேகமேயில்லை..'' என்று கூறி முடித்தார் செட்டியார். அவர் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது.

''கவலைப்படாதீர்கள். செட்டியார், எப்படியாவது இதைக் கண்டு பிடித்து உங்கள் கவலையைப் போக்கவில்லையென்றால் நான் இன்ஸ்பெக்டர் ராஜன் இல்லை. தைரியமாக இருங்கள்'' என்று சொல்லி, வீட்டில் எல்லோரையும் அமைதியாகப் படுத்துக் கொள்ளும்படியும் கூறிவிட்டு, போலீஸ் காரர்களுடன் ஜீப்பில் போய் ஏறிக் கொண்டார் இன்ஸ்பெக்டர். மறு நிமிஷம் கார் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பறந்தது.

* * *

இன்ஸ்பெக்டர் ராஜனுக்கு இந்தக் கேஸின் மர்மமே புரியவில்லை. ராத்திரி பன்னிரண்டு மணிக்குமேல் பேய் சிரிக்கும் சத்தம்; அந்தரத்தில் தெரியும் பயங்கர மண்டை ஓடு; காரிருளில் அந்த மண்டை ஓடு எப்படி ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்க முடியும்? இவையெல்லாம் ராஜனுக்கு விளங்காத புதிராகவே தோன்றியது. பணத்தைக் கொள்ளையடிப்பதில் புது முறையை அல்லவா அநுஷ்டிக்கிறார்கள்! சரி, எப்படி இருந்தாலும் நம் கடமையைச் செய்ய முயற்சிப்போம்' என்று தீர்மானித்தார். இதற்கிடையில் முப்பது நாட்கள் ஓடி மறைந்தன. மறுபடியும் அதே அமாவாசை இரவு - மாணிக்கவேலு செட்டியார் பங்களாவில் நடந்த நிகழ்ச்சிகளே, செட்டியாரின் தம்பியான குழந்தைவேலு செட்டியாரின் வீட்டிலும் நடந்தது. இன்ஸ்பெக்டர் ராஜன் அங்கும் ஆஜரானார். செட்டியாரை நன்றாக விசாரித்தார். குழந்தைவேலு செட்டியாரும், மாணிக்கவேலு சொன்ன மாதிரியே பதில்

சொன்னார். மறுபடியும் அதே மாதிரி சத்தம் - மண்டை ஓடு - இவைகளே மறுபடியும் பணத்தைக் கொள்ளையடிக்க ஆதாரமாக இருந்தன என்பதைக் கேட்க இன்ஸ்பெக்டர் ராஜனின் திகைப்புப் பன்மடங்கு அதிகமாகியது. இனிமேல் இப்படியே தொடர்ந்து நடக்கவிட்டால் தனக்கும் போலீஸ் இலாகாவுக்கும் பெருத்த அவமானமாக முடியும் என்று நினைத்து, அதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கினார். அதற்கேற்றாற்போல மேலதிகாரியிடமிருந்தும் இதைப் பற்றித் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி கடுமையான உத்தரவு வந்தது. இன்ஸ்பெக்டரின் மூளை தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது.

முதல் முதல் இவருக்கு ஒரு நிச்சயமான நம்பிக்கை ஏற்பட்டது. அதாவது இந்தத் திருட்டு அமாவாசையன்று இரவுதான் நடக்கிறது என்பதைக் கடந்த இரண்டு கொள்ளைகளினின்றும் நிச்சயம் செய்துகொண்டார். மறுபடியும் அமாவாசைக்குப் பதினைந்து நாட்களே இருந்தன. இம் முறை எப்படியாவது அந்த மர்மத்தைக் கண்டு பிடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார்.

அமாவாசையன்று இரவு

திருடன் பணக்காரர் வீட்டில் தான் திருடுவான் என்பது இன்ஸ் பெக்டருக்குத் தெரிந்தது தானே! முக்கியமாக நான்கைந்து பெரும் புள்ளிகளாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் வீட்டைச் சுற்றிப் போலீஸ் காவல் வைத்தார். தான் ஒரு முக்கியமான பணக்காரரின் வீட்டில் ஒளிந்துகொண்டு உதவிக்குச் சிலரையும் வைத்துக்கொண்டார். இந்த முறை அவன் நிச்சயமாக அகப்பட்டுக்கொள்வான் என்ற நம்பிக்கை அவருக்கு. எல்லா ஏற்பாடுகளும் முடிந்தன. இன்ஸ்பெக்டர் கைக் கடிகாரத்தைக் கவனிக்கத் தொடங்கினுர். கடிகாரத்தின் முட்கள் பன்னிரண்டை நெருங்கின. இன்ஸ்பெக்டர் ராஜன் உஷாரானுர். அவர் பையிலிருந்த ரிவால்வரைத் தொட்டுப் பார்த்துக்கொண்டார். திடீரென்று ஒரு பயங்கரச் சிரிப்புச் சத்தம் இன்ஸ்பெக்டரை ஒரு குலுக்குக் குலுக்கியது. கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த செட்டியார் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருந்து, "இன்ஸ்பெக்டர் ஸார்" என்று கத்தினுர். ராஜன் அவரை அமைதியாக இருக்கும்படி கூறிவிட்டு, அந்தப் பயங்கரச் சிரிப்புச் சப்தம் வந்த திசையை நோக்கிக் கவனிக்கத் தொடங்கினுர்.

இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து இருபதடி தூரத்தில், ஒரு பயங்கர மண்டை ஓடு காட்சியளித்தது. பயத்தினுல் செட்டியார் கண்களைப் பொத்திக்கொண்டார். சிரிப்புச் சத்தம் அதிகமாகியது. இன்ஸ்பெக்டர் ராஜன் சிறிது நேரம் அதையே கவனிக்கத் தொடங்கினுர். பிறகு சத்தம் வந்த இடத்திற்கும் மண்டை ஓடு இருக்கும் இடத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று அறிந்துகொண்டார். அவ்வளவுதான். மறு விநாடி—

தம் கைத் துப்பாக்கியை எடுத்து மண்டை ஓட்டைக் குறி வைத்துச் சுட்டார். உடனே அந்தரமாக நின்றுகொண்டிருந்த மண்டை ஓடு விறுவிறுவென்று கீழே இறங்கத் தொடங்கியது. இன்ஸ்பெக்டர் ராஜன் உடனே 'விசிலை' எடுத்து ஊதினுர். அடுத்த நிமிஷம் போலீஸ் ஜவான்கள் நான்கைந்து திருடர்களை விலங்கிட்டு அழைத்துக்கொண்டு இன்ஸ்பெக்டரை நோக்கி வந்தனர். இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. தம்முடைய புத்தி கூர்மையைத் தாமே மெச்சிக்கொண்டார். ஒன்றும் புரியாத செட்டியார் திகைத்து நின்ருர். அவர் கண்கள் தான் பணப் பெட்டியை நோக்கியே பதிந்திருந்தனவே.

மறுநாள் திருடர்கள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர். தண்டனையும் அளிக்கப்பட்டது. மர்மமாகக் கொள்ளையடித்த அந்தத் திருடர்களைக் கண்டு பிடித்ததற்காக எல்லோரும் இன்ஸ்பெக்டர் ராஜனைப் புகழ்ந்தார்கள். அர்த்த ராத்திரியில் தெரிந்த அந்த மண்டை ஓட்டின் ரகசியம் என்ன? பயங்கரச் சிரிப்பு எங்கிருந்து வந்தது? இவைகளுக்கெல்லாம் இன்ஸ்பெக்டர் தமக்கு அளிக்கவிருக்கும் 'டீபார்ட்டி' சமயத்தில் பதில் கூறுவதாகச் சொல்லியிருந்தார்.

அடுத்த வாரம் விருந்து பிரமாதமாக இருந்தது. விருந்து முடிந்ததும் ராஜன் பேச ஆரம்பித்தார். "திருடர்கள் மற்றவர்களைப்போல், கொலை செய்தும் வீட்டைக் கொளுத்தியும் திருட முயற்சிக்கவில்லை. தந்திரத்தினுலேயே மர்மமாகக் காரியத்தை முடித்திருக்கிருர்கள். அவர்களுக்குத் திருட்டுப் புத்தியுடன்கூட நல்ல மூளையும் இருக்கிறது.

"விஞ்ஞான அறிவுகொண்ட அந்தத் திருடர்கள் ஒரு பலூனில் ஹைட்ரஜன் வாயுவை நிரப்பி அதில் உயர்ந்த ரேடியத்தால் மண்டை ஓடுபோல எழுதிவைத்திருக்கிருர்கள். அமாவாசையில் தானே நல்ல இருட்டை எதிர்பார்க்கமுடியும்? மேலும் ஹைட்ரஜன் வாயு நிரப்பப்பட்ட பலூன் மேலே போகவேதான் முயற்சிக்கும்; நூல் கயிற்றின் வழியாக அதைக் குறிப்பிட்ட உயரத்தில் நிறுத்தி வைத்துக்கொண்டு பின்னுல் ஒரு பழக்கப்பட்ட

மனிதன் பேய்போலச் சிரிக்கிறான். பார்ப்பதற்கு அது மண்டை ஓடு போலவும், அதுவே சிரிப்பது போலவும் காணப்படுகிறது. நாம் பிரமையால் சிறிது நேரம் அதையே உற்றுப் பார்ப்பதால் நம்மை நோக்கி வருவதுபோலவும் தோன்றும். இருட்டில் உயர்ந்த ரேடியம் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கக் கேட்கவா வேண்டும்? இப்படி ஆளை மயக்கிப் பயமுறுத்திப் பணத்தைத் திருடிக்கொண்டு போகிற திருடர்கள் போலீஸுக்குப் போனையும் பண்ணி விட்டுப் போகிறார்கள். அவ்வளவு நம்பிக்கையோடு திருட்டை நடத்தியிருக்கிறார்கள்.

''அன்று இரவு நான் துப்பாக்கியால் சுட்டதும், அந்த மண்டை ஓடு கிழிந்ததிலிருந்து அது ஒரு பலூன் போன்ற வஸ்துதான் என்று தீர்மானித்தேன். மேலும் அந்தப் பயங்கரச் சிரிப்பிற்கும் மண்டை ஓட்டிற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்பதை ஆரம்பத்திலேயே அறிந்து கொண்டேன். அதனால்தான் என்னால் நம்பிக்கையோடு சுட முடிந்தது.

''மண்டை ஓட்டைக் காட்டிப் பயமுறுத்தியபின், உள்ளே நுழைய முயற்சித்த திருடர்களைக் கீழே நான் காவல் வைத்திருந்த போலீஸ்காரர்கள் கைது செய்திருக்கிறார்கள். யாருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படாததாலும், பொருள் நஷ்டமில்லாமல் கிடைத்து விட்டதாலும் திருடர்களுக்குத் தண்டனையைக் குறைத்தே அளிக்கப்பட்டிருக்கிறது. திருடர்களுடைய புதிய முறை மர்மத் திருட்டையும் அவர்கள் புத்திக் கூர்மையையும் நாம் மெச்சத்தான் வேண்டியிருக்கிறது. எல்லோருக்கும் அவரவர்கள் சொத்து திரும்பக் கிடைத்ததில் மிகவும் சந்தோஷம்தான் என்று நினைக்கிறேன்'' என்று கூறி முடித்ததுசான் தாமதம், அந்தக் கூட்டத்தில் எழுந்த கரகோஷம் வானைப் பிளந்தது. மாலைகளாக வந்து இன்ஸ்பெக்டர் கழுத்தில் விழுந்தன. அதற்கடுத்த வருஷம், இன்ஸ்பெக்டர் ராஜன், 'சூப்பரின்டெண்'டாக மாற்றப்பட்டார் என்று சொல்லவும் வேண்டுமா?

மாயப் பெட்டி

ரா. நடராஜன்

"ஏய், தம்பி! இங்கே வா!"

"ஏன் பாட்டி, உனக்கு என்ன வேண்டும்?"

"எனக்கு ஒன்றும் வேண்டாம். எல்லாம் உன் நன்மைக்குத்தான் கூப்பிட்டேன்."

"என் நன்மைக்கா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. நீ யார் என்பதே எனக்கு முதலில் தெரிய வில்லையே!"

"உனக்கு அதிருஷ்டம் வந்திருக் கிறது, தம்பி! அதிருஷ்டம்! நீ ஒரு பெரிய பணக்காரனாகப் போகி றாய்!"

"என்ன சொல்கிறாய், பாட்டி, சரியாகத்தான் சொல்லேன்!"

"உன் பெயர் என்ன? அதைச் சொல் முதலில்."

"என் பெயர் கந்தநாதன். நீ சொல்வது எனக்குப் புதிர் போலி ருக்கிறதே. சாலை வழியே போய்க் கொண்டிருக்கும் எனக்குத் திடீ ரென்று அதிருஷ்டம் எப்படி வரும்? அதிருக்கட்டும், விஷயத்தைச் சீக் கிரம் சொல். வானத்தில் மேகங் கள் சூழ்ந்து மழை பெய்யும் போலிருக்கிறது. நான் இன்னும் இரண்டு மைல் நடந்து மூஞ்சூர் போய்ச் சேரவேண்டும்."

"கந்தா! அவசரப்படாதே, இப் போது மழை இங்கே பெய்யாது. காற்று மேகங்களை வேறு இடத் துக்கு இழுத்துச் சென்றுவிடும். நான் சொல்வதைக் கேள்" என் றாள்.

அதே போல் காற்றும் மழையை வேறு திசையாக அடித்துச் சென் றது. பிறகு பாட்டி அவனைப் பார்த்து, "அதோ ஒரு பெரிய மரம் இருக்கிறதே! அதன் கீழே ஒரு பொந்து இருக்கிறது. அதன் வழி யாக இறங்கிச் சென்றால் மூன்று அறைகளைக் காணலாம். முதல் அறையின் கதவைத் திறந்து உள்ளே போ. அங்கே ஒரு நாய் பயங்கரமாகப் பார்த்துக்கொண் டிருக்கும். அது ஒரு பொம்மை தான். அதைக் கீழே இறக்கி வைத்துவிட்டுப் பார்த்தால் அந்தப் பெட்டி நிறையச் செப்புக் காசு கள் இருக்கும். வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு அடுத்த அறைக்குப் போ. அங்கேயும் ஒரு நாய் இருக்கும். அதையும் இறக் கிப் பார். ஒரே வெள்ளி நாணயங் களாக இருப்பதைக் காண்பாய். அதையும் தேவையான அளவு எடுத் துக்கொண்டு மூன்றாவது அறைக் குப் போ. இதே போல் அங்கேயும் ஒரு நாய் உண்டு. அதையும் இறக்கி உனக்குப் போதுமான தங்க நாணயங்களை எடுத்துக் கொள். கடைசியில் வரும்போது எனக்காக ஒரு சிறிய உதவி செய்ய வேண்டும். மூன்றாவது அறையின் வெளிப்புறத்தில் ஒரு பிறை இருக் கிறது. அதில் தீப்பெட்டி அளவு ஒரு சிறிய பெட்டி ஒன்று இருக்கும். அதை மாத்திரம் என்னிடத்தில் கொண்டுவந்து கொடுத்துவிடு!" என்றாள்.

கந்தநாதனுக்கு முதலில் நம்பிக் கையே இல்லை. ஆனால் அந்தக் கிழவி சொல்வதைப் பார்த்தால் உண்மை போலவும் இருந்தது. பணம் என்றால் எல்லாருக்கும் ஆசை தானே? இருந்தாலும் அவன் உண் மையில் கெட்டிக்காரனும்கூட. "சரி". என்று அவளுடன் அந்த மரத்தடிக்குச் சென்றான். அந்தப் பொந்தின் வழியே பார்த்தபோது இறங்கிச் செல்லப் படிக்கட்டும் இருந்தது. கடைசியில் சிறிது வெளிச்சமும் தெரிந்தது. பிறகு தைரியமாக, 'வருவது வரட்டும்' என்று இறங்கி முதல் அறையின் கதவைத் திறந்தான். உடனே தூக்கிவாரிப் போட்டது, உயிருள்ள ஒரு நாய்-ஏன், சிறுத்தை

என்றே சொல்லலாம் - அவன் மீது பாய வருவதைப்போல இருந்தது. உற்றுப் பார்த்தபோதுதான் அது ஒரு பொம்மை என்று கண்டு பிடிக்க முடிந்தது. அதை இறக்கி வைத்து விட்டுப் பெட்டியைத் திறந்தான். ஒரே செப்பு நாணயங்கள். இரண்டு பைகள் நிறைய எடுத்துக் கொண்டு அடுத்த அறையை அடைந்தான். அங்கே வெள்ளி நாணயங்கள் குவிந்து கிடப்பதைக் கண்டதும் செப்பு நாணயங்கள் எதற்கு என்று அவைகளைக் கொட்டிவிட்டு வெள்ளி நாணயங்களை எடுத்துக் கொண்டான். மூன்றாவது அறைக்குச் சென்று வெள்ளி நாணயங்களைக் கொட்டிவிட்டுத் தங்கக் காசுகளை முடிந்த அளவு வாரிக் கொண்டு அந்தக் கிழவி சொல்லிய சிறிய பெட்டியையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். வெளியே அந்த மந்திரக்காரக் கிழவி தயாராகக் காத்துக்கொண்டிருந்தாள். இவனைக் கண்டதும், ''பெட்டி எங்கே, பெட்டி எங்கே?'' என்று பறந்தாள். கந்தநாதனுக்குச் சந்தேகம் தட்டியது. 'இதற்குள் என்ன இருக்கும்? தங்கம், வெள்ளி நாணயங்களைக் கூட லட்சியம் செய்யாமல் இதை மாத்திரம் ஏன் கேட்கிறாள்? அதன் ரகசியம் என்ன?' என்று யோசித்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

கிழவியை எப்படியோ சமாதானப் படுத்தி வெளியே வந்தான். பெட்டியின் ரகசியத்தைப் பற்றிப் பல விதமாகக் கேட்டான். கிழவி உண்மையைச் சொல்லவில்லை. ''சரி; அதை நான் எடுத்துவர மறந்துவிட்டேன். வழியை விடு. போய்க் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி அந்தப் பெட்டியுடன் ஓட்டம் பிடித்தான். பாவம்! கிழவி என்ன செய்வாள்! ஏமாந்து போய் மரத்தடியிலேயே சோர்ந்து விழுந்து விட்டாள்.

கந்தநாதன் இப்போது பணக்காரனாகி விட்டான். பணக்காரனாகிவிட்ட பிறகு கிராமத்தில் என்ன வேலை? பக்கத்திலுள்ள நகரத்தில் அழகிய பங்களா ஒன்று கட்டிக் கொண்டு வாழ்ந்து வரலானான். ஆனால் சில வருஷங்களில் கையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்துவிட்டது. என்ன செய்வது என்று புரியவில்லை. இப்போது தான் அந்தச் சிறிய பெட்டியின் ஞாபகம் வந்தது. அதை எடுத்துத் திறந்து பார்த்தான். அதனுள்ளே மூன்று தாயத்துகள் இருந்தன. ஒன்று செப்பு, மற்றொன்று வெள்ளி, மூன்றாவது தங்கம். ஒன்றை எடுத்துக் கையால் உரைத்துப் பார்த்தான். உடனே அவன் முன்னால், அந்த அறையில் முன்பு கண்ட நாய் தோன்றியது. இப்போது அது பொம்மையாக இல்லை. உயிருடனிருந்தது. ''ஏன் கூப்பிட்டாய், என்ன வேண்டும்?'' என்று கந்தநாதனைப் பார்த்துச் சிங்கம் போல் கர்ஜித்தது. அவன் உடல் நடுங்க, வாய் குழற, ''காசு வேணும்'' என்று கூறினான். அவன் உரைத்துப் பார்த்தது தங்கக் காசு. அதனால் தங்கக் காசுகளாகக் கை நிறையக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றது அந்த நாய். இப்போதுதான் அந்தப் பெட்டியின் மகிமை அவனுக்கு விளங்கிற்று. அது முதல் அந்தப் பெட்டியை அவன் பத்திரப்படுத்தி வைத்தான்.



கந்தநாதன் வசித்த நகரத்தில் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சந்திர கலா என்ற ஒரே பெண். ஒரு நாள் ஜோஸ்யன் ஒருவன் சிற்றரச னின் விருப்பப்படி வந்து அவள் கையைப் பார்த்தான். அவன் முகம் சுண்டியது: ''அரசே! உங் கள் குமாரி சாதாரணக் குடியான வன் ஒருவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டிவரும்'' என்று கூறிச் சென்றான். அரசன் இதைக் கேட்டுச் சொல்லொணுத் துயர் அடைந்தான். ஓர் அரச குமாரி ஒரு குடியானவனைக் கல் யாணம் செய்து கொள்வதென் ருல் எவ்வளவு அவமானம்! இதை நினைக்க நினைக்க அவனுடைய துய ரம் பன்மடங்கு அதிகமாகியது. கடைசியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். அதன்படி அவளை ஓர் அறையில் தள்ளி யாரும் பார்க்க முடியாதபடி காவல் வைத்துவிட் டான்.

சந்திரகலாவின் அழகைப் பற் றிக் கேள்விப்பட்ட கந்தநாதன் அவளை எப்படியாவது கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று விருப்பங்கொண்டான்.

ஒரு நாள் இரவு அவர்கள் வீட் டுக்குச் சென்று அவள் இருக்கும் அறையை அடைந்தான். ஜன்னல் வழியாக வெளியிலிருந்தே எட்டிப் பார்த்தான். அவள் அழகைக் கண் டதும் அவனுடைய கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. அவ்வளவு அழகாக இருந்தாள். அதே சமயத்தில் சந்திரகலாவும் ஜன்னல் பக்கம் திரும்பினாள். அவள் வெகு நாட்களாக ஆண் களையே-ஏன் வீட்டு வேலைக்காரி யைத் தவிர வேறு யாரையுமே பார்க்கவில்லையல்லவா? இவனைக் கண்டதும் அவள் அடைந்த சந் தோஷத்தை அளவிடவே முடி யாது. உடனே ஜன்னல் அருகே ஓடிவந்து தாழ்ந்த குரலில்-பயந்த குரலில் யார், என்ன விஷயம் என் பதைக் கேட்டுத் தெரிந்துகொண் டாள்.

பிறகு அவள், ''பணக்காரனுக இருந்துவிட்டால் மட்டும் என்ன பெருமை? அந்தப் பணத்தை நல் வழியில் பயன் படுத்துவதல்லவா பெருமை!'' என்று சொல்லிவிட்டு ஜன்னலை மூடிவிட்டாள். கந்த நாதன் மனம் ஒடிந்து திரும் பினுன்.

அப்போது அந்த நாட்டில் எங் கும் பஞ்சம் பரவியிருந்தது. ஜனங் கள் மிகவும் கஷ்டப்பட்டனர். இந் தச் சமயத்தில் தன்னை வந்து கேட்கும் ஏழைகளுக்கெல்லாம் ஒவ்வொரு தங்கக் காசு கொடுக்க ஆரம்பித்தான் கந்தநாதன். செய்தி உடனே ஊர் முழுவதும் பரவியது. இது சிற்றரசன் காதுக்கும் எட்டி யது. இதைக் கேட்ட சிற்றரசன் ஆச்சரியப்பட்டான். நம்முடைய கஜானுவே காலியாக இருக்கும் போது ஒருவன் தங்கக் காசு தானம் வழங்குகிருன் என்ருல் சாதாரணமா? எவ்வளவு பெரிய செல்வந்தனுக இருக்கவேண்டும்!'' என்று யோசித்தான். உடனே கந்தநாதனை அழைத்துவர உத்தர விட்டான்.

அரசன் கந்தநாதனைப் பார்த்து, ''உனக்கு இத்தனை காசுகள் எங்கே கிடைத்தன?'' என்று கேட் டான்.

கந்தநாதன் சிறிது யோசித்து, ''அரசே, இது என்ன பிரமாதம்! இன்னும் எத்தனை வேண்டுமானு லும் என்னுல் கொடுக்க முடியும்!'' என்ருன்.

''அப்படியா?''

''ஆமாம், அரசே!''

அரசன் பிரமித்துப் போனுன். இவன் கொட்டத்தை அடக்க எண்ணி, ''என் கஜானுவை நிரப்ப முடியுமா?'' என்ருன்.

''ஓ! தாராளமாக. ஆனுல் உங்க ளுடைய மகள் சந்திரகலாவை எனக்கு மணம் செய்து கொடுப்ப தாக இருந்தால் இந்தக் கஜானு என்ன, இதுபோன்று எவ்வளவு கஜானுக்கள் இருந்தாலும் அவை களை நாணயங்களால் நிரம்பி வழி யும்படி செய்ய என்னுல் முடியும்.''

இந்த வார்த்தைகளைக் கேட்ட தும் அரசன் ஒருபுறம் கோபமும் ஒருபுறம் வியப்பும் அடைந்தான்.

தன் மகளைக் கேட்கத் துணிந்து விட்டானே என்றுதான் கோபம். தன் ராஜ்யத்தில் இவ்வளவு பெரிய

செல்வச் சீமானும் இருக்கிருஞ என்றுதான் வியப்பு.

அரசன் சிறிது நேரம் நிதானத்துடன் யோசித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவனாக, ''உன்னுடைய பேச்சு எனக்குப் புதுமையாக இருக்கிறது. நீ முதலில் கஜானாவைப் பொன் நாணயங்களால் நிரப்பிவிட்டு அப்புறம் என் மகளை மணந்துகொள்ள முன் வரலாம். ஆனால் அதை நீ செய்யத் தவறினால், உன் தலையை இழக்க வேண்டியிருக்கும். சம்மதமா?'' என்றான்.

கந்தநாதன் தலைவணங்கி, ''அரசே, கஜானாவைக் காலையில் போய்ப் பாருங்கள்!'' என்றான்.

இரவோடு இரவாக அந்த மாயப் பெட்டியை எடுத்துத் தங்கத்தாயத்தை உரைத்தான். அந்த நாய் வந்தது. கந்தநாதன் விருப்பப்படியே கஜானாவில் தங்க நாணயங்களைக் குவித்துவிட்டுச் சென்றது.

காலையில் எழுந்தவுடனே ஓடி வந்த அரசன்-கஜானாவில் கண்ணைப் பறிக்கும் நாணயங்களைக் கண்டு திடுக்கிட்டான். அவனுக்கு அது கனவா நனவா என்பதே முதலில் புரியவில்லை.

கந்தநாதன் சிரித்துக்கொண்டே அவ்விடம் வந்து, ''அரசே! என் வாக்கை நிறைவேற்றிவிட்டேன். தாங்கள் தான் இனித் தங்கள் வாக்கைக் காப்பாற்ற வேண்டும்'' என்றான்.

''என் மகளைவிட, இந்த மக்களுடைய நல்வாழ்வுதான் முக்கியம். வறட்டுக் கௌரவத்துக்காக நான் அவர்களைப் பட்டினிபோட முடியுமா? என் மக்களைக் காப்பாற்ற முன் வந்த உனக்கு என் மகளைக் கொடுக்கத் தடையில்லை!'' என்றான் அரசன்.

அரசன் மகளின் திருமணத்தை முன்னிட்டு மக்களுக்குத் தன் பொக்கிஷச் சாலையையே திறந்துவிட்டான். மக்களின் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா?

பிள்ளையாரின் சக்தி

ஏ. டி. ரங்கமணி

"நாலணாவை அப்பா ஜேபியிலிருந்து எடுக்கப் பயப்படறியே! தைரியமாப் போய் எடுடா. அப்பாவுக்கு ஒண்ணும் தெரிஞ்சுடாது'' என்று தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்த கிட்டுவுக்குத் தைரியம் ஊட்டினுன் பாலு.

''வேண்டாம்டா! அப்பாவுக்குத் தெரிஞ்சா என் முதுகுத் தோலை உறிச்சிடுவார். இன்னொரு சமயம் துட்டு கிடைக்கச்சே பாத்துக்கலாம்டா'' என்ருன் கிட்டு.

''இன்னொரு சமயம் ரங்கராட்டினம் உனக்காக வராது. கபாலி தெப்பத்திற்காக வந்திருக்காக்கும். எங்க அப்பா மட்டும் ஊரிலே இருந்தா உன்னைக் கெஞ்சுவேனுக்கும். போடா பயந்தாங்கொள்ளி. என்னமோ அப்பா கிட்டே அப்படி அலறிச் சாகறியே.''

அதற்குமேல் கிட்டுவினுல் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. அவன் மனசுக்கு பாலு சொன்னது சரியென்று பட்டது. அடுத்த நிமிஷம் அசைக்க முடியாத ஒரு தீர்மானத்தோடு பாலுவின் யோசனையை நிறைவேற்ற வீட்டுக்குக் கிளம்பினுன்.

கிட்டுவும் பாலுவும் மயிலாப்பூரில் உள்ள ஒரு பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள். கிட்டு பெற்ருேருக்கு அடங்கிய பிள்ளை. பாலு அடிக்கடி பள்ளிக்கு மட்டம் போடுவான். ஊர் சுற்றிக்கொண்டிருப்பதும், எங்கேயாகிலும் அரட்டை அடித்துக்கொண்டிருப்பதும்தான் வேலை. ஒரு சில நாட்களாகத்தான் பாலு கிட்டுவுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தான். அதற்குக் காரணமில்லாமலில்லை. எப்பொழுதும் 'பாக்கெட்'டில் எட்டணாவுடன் உலாவி வரும் பாலுவுக்கு அந்தச் சமயத்தில் காலணு கிடைப்பதே குதிரைக் கொம்பாக இருந்தது. தன் பணமுடையைச் சரிகட்டச் சரியான ஆசாமி கிட்டுதான் என்று அவனைத் தன் வலையில் போட்டுக்கொண்டான்.

கபாலி கோயிலில் தெப்ப உற்சவம் நடந்துக்கொண்டிருந்தது. அந்த உற்சவத்திற்குக் கடைகளும், ரங்கராட்டினங்களும் வந்திருந்தன. கிட்டுவுக்கு ரொம்ப நாட்களாக ரங்கராட்டினத்தில் ஏறிச் சவாரி செய்யவேண்டுமென்ற ஆசை யிருந்தது. ஆனுல் அவன் கையில் காசு இல்லை. கிட்டுவின் தகப்பனுர் ஓர் அலாதிப் பேர்வழி. இந்த மாதிரி அநாவசியச் செலவெல்லாம் அவருக்குப் பிடிக்காது. இந்தச் சமயத்தில்தான் கிட்டுவின் ஆசைக்குத் தூபம் போட்டான் பாலு.

பூனைபோல் மெல்ல வீட்டிற்குள் நுழைந்தான் கிட்டு. அவன் தகப்பனுர் ஆபீசுக்குக் கிளம்பும் நேரமாகையால் உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இதை, சமையலறையிலிருந்து அம்மா, அப்பா பேச்சுக்கள் வருவதிலிருந்து அறிந்துகொண்டான் கிட்டு.

கால்களின் பெருவிரல்களை அழுத்தமாகத் தரையில் ஊன்றியபடியே மெல்ல அடிமேல் அடி வைத்துத் தகப்பனுரின் அறைக்குள் பிரவேசித்தான். அவன் இருதயம் முன்னைக் காட்டிலும் வேகமாக அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. அப்பாவின் காவி நிறக் கதர் ஜிப்பா 'கோட் ஸ்டாண்'டில் கம்பீரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது.

ஆர்வமும் அவசரமும் ஒன்றையொன்று உந்த மெதுவாகக் 'கோட் ஸ்டாண்'டை நெருங்கினுன் கிட்டு. மின் வெட்டும் நேரத்தில் பக்கவாட்டு ஜேபியில் கையை விட்டு அப்பாவின் கறுப்பு நிற மணிபர்ஸை எடுத்தான்.

தெருக்கோடியில் இருக்கும் பிள்ளை யாரை வேண்டியவாறே, சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே பர்ஸுக் குள் கையை விட்டான்.

என்ன துரதிருஷ்டம்! இவன் எதிர்பார்த்து வந்த 'நாலணு' சில்லறையாக அந்தப் பர்ஸில் இல்லை. அதற்குப் பதிலாக ஒரே 'ஒரு ரூபாய்' நோட்டுக்கள் திணித்து வைக்கப்பட்டிருந்தன.

''சரி! நமக்கு அவ்வளவுதான் அதிருஷ்டம்'' என்று எண்ணிய வாறே அப்பா வருவதற்குள் பர்ஸை மூடி ஜேபிக்குள் போட எத்தனித்தான். அவன் மனக்கண் முன் ரங்கராட்டினம் சுழலுவது போலும், தான் அதில் ஏறிச் சவாரி செய்வது போலும் ஓர் எண்ணம் பளிச் சிட்டது.

அப்பாவிடத்தில் தான் இவ்வளவு நோட்டுகள் இருக் கிறனவே. ஒரு நோட்டை எடுத்துக்கொண்டால் என்ன என்று சபலம் தட்டியது. அடுத்த விநாடி அதன்படியே செய்தும்விட்டான் கிட்டு. வந்த சுவடு தெரியாமல் பள்ளிக்கு ஓட்டம் பிடித்தான் அவன்.

பள்ளிக்கூட மணி அடிப் பதற்கு இன்னும் அரை மணி இருந்தது. இதற்குள் கிட்டுவும் பாலுவும் அநேக தடவைகள் ரங்கராட்டினத்தில் சுற்றி விட்டனர். அந்தப் பொம் மைக் குதிரையில் சவாரி செய் யும்பொழுதெல்லாம், கிட்டு வுக்கு அவன் வகுப்பு ஆசிரியர் ஒரு சமயம் தேசிங்கு ராஜனைப் பற்றிச் சொன்ன கதை நினைவுக்கு வந்தது,

''பள்ளிக்கூட முதல் மணி கூட அடித்தாகி விட்டதுடா. வாடா போகலாம்'' என்று பாலுவைக் கூப்பிட்டுக் கொண்டே பள்ளிக்கு ஓடி ஞன். ஓடும்பொழுது பாக் கெட்டிலிருந்து வந்த 'சில் லறை சத்தம்' இன்னும் இரண்டணுதான் மீதி யிருக் கிறது என்பதை எடுத்துக் காட்டியது.

கிட்டுவுக்கு வகுப்பில் பாடங் களே ஓடவில்லை. அவன் மனசு எல்லாம் வீட்டின் மேலேயே லயித் திருந்தது. 'இந்த நேரம் அப்பா வுக்கு நம் குட்டு தெரிந்திருக் கும். சாயங்காலம் போனல் சரி யான அடி இருக்கிறது' என்று எண்ணமிட்டான். அவனையும் அறி யாமல் இப்பொழுது பயம் கவ்விக் கொண்டது. தெருக்கோடியில் வீற்றிருக்கும் பிள்ளையாரைப் பல முறை வேண்டிக்கொண்டான். ''பிள்ளையாரே! நான் எடுத்த ஒரு ரூபாய் மட்டும் என் அப்பாவுக்குத் தெரியாமல் இருந்தால், உமக்கு

ஓரணாவுக்குக் கற்பூரம் வாங்கிக் கொளுத்துகிறேன்'' என்று வேண்டிக்கொண்டான். அவனையும் அறியாமல் அவன் கை காகிதத்திலும் நோட்டுப் புத்தகங்களிலும் மேலே சொன்ன விஷயத்தை எழுதிக்கொண்டிருந்தது.

மாலை வந்தது. எங்கே போவது? வீட்டிற்குப் போனால் சரியான டோஸ் இருக்கிறதே! என்ன செய்வான் கிட்டு, பள்ளி விட்டதற்கப்புறம்கூட வகுப்பிலேயே உட்கார்ந்திருந்தான் கிட்டு. பள்ளிப் பியூன் வந்து, ''என்ன தம்பி, இங்கேயே உட்கார்ந்திருக்கிறாயே! பள்ளிக்கூடம் விட்டு அரைமணி ஆகப் போகுது'' என்று சொன்ன பிறகுதான் கிட்டுவுக்குச் சுய உணர்வு வந்தது. 'பாலுகூட பணம் இருக்கும் வரையில் நம்முடன் உறவாடிக்கொண்டிருந்தான். இப்பொழுது சொல்லாமல்கூட போய்விட்டானே' என்று நினைத்தபொழுது கிட்டுவுக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

அருகிலிருக்கும் 'பண்டாபீஸ்' மணி ஐந்தடிக்கும் ஒலியைக் கேட்டதும், கிட்டு நேராக வீட்டிற்குப் போகாமல் அருகிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பல தடவைகள் சுற்றினான். அவன் வாய் மத்தியானம் பள்ளியில் பிள்ளையாரிடம் வேண்டிக்கொண்ட வரத்தை முணுமுணுத்துக்கொண்டிருந்தது.

இரவும் பகலும் உறவாடும் நேரம். கிட்டு வீட்டிற்குக் கிளம்பினான். பயப்பேய் அவனை நன்றாகப் பிடித்துக்கொண்டிருந்தது. 'அப்பா ஆபீஸிலிருந்து வந்திருப்பார். இந்த நேரம் அம்மாவிடம் நான் திருடிப் போன ஒரு ரூபாயைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பார்' என்று கிட்டுவின் மனசு நினைத்தது.

கிட்டுவின் கால்கள் எப்படியோ வீட்டை நெருங்கிவிட்டன. அவன் உடல் வியர்வைத் துளிகளால் நனைந்திருந்தது. காலையில் பணம் எடுத்தபொழுது இருந்த வேகத்தை விட இப்பொழுது அவன் இருதய வேகம் அதிகமாக இருந்தது. 'அப்பா ஆபீஸிலிருந்து வந்துவிட்டார்' என்பதை உள்ளேயிருந்து வரும் மிடுக்கான குரலிலிருந்து தெரிந்துகொண்டான். உள்ளே செல்லாமல் வெளியிலேயே நின்றுகொண்டு அவர்கள் பேசுவதை உற்றுக் கவனித்தான்.

''வரட்டும் அந்தப் பயல். இன்றைக்கு இரண்டிலொன்று பார்த்துவிடுகிறேன். அந்தத் திருட்டுக் கையை நசுக்கி விடுகிறேன். நம்மிடமே வேலையைக் காட்டுகிறான் பயல்.''

உள்ளேயிருந்து பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையும் கிட்டுவின் காதுகளில் உருக்கிய ஈயத்தை ஊற்றுவதுபோல் இருந்தது 'இப்பொழுது வீட்டிற்குள் செல்ல வேண்டாம். இன்றிரவு பாலுவின் வீட்டில் போய்ப் படுத்துக்கொண்டால் என்ன?' என்று திரும்பி ஓரடி எடுத்து வைப்பதற்குள் அவனிடத்திலிருந்து கிளம்பிய பாழாய்ப் போன தும்மலொன்று அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

''யாரடா அது வெளியே, கிட்டுவா? ஏண்டா இவ்வளவு நாழி? காலையிலே என்ன செஞ்சிட்டுப் போனே? ராஸ்கல்! இங்கே வாடா'' - கிட்டுவின் தகப்பனார் கடுகு பொறிவதுபோல் ஆபீஸ் ரூமிலிருந்து அதட்டிக் கூப்பிட்டார்.

கூப்பிட்டவுடனே போகாவிட்டால் அப்பாவின் குணம் கிட்டுவுக்குத் தெரியும். உடல் பதை பதைக்க, உள்ளம் நோக, கை கால்கள் தந்தியடிக்க மெதுவாக உள்ளே சென்றான் கிட்டு.

''ஏண்டா இவ்வளவு நாழி?''

''பள்ளிக்கூடத்தில் ஒரு மீட்டிங் அப்பா!'' அதிக ஜுரத்தில் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் ஒரு பையன் பேசுவதுபோல் இருந்தது கிட்டுவின் குரல்.

''காலையிலே என்ன செஞ்சுட்டுப் போனே? உண்மையைச் சொல்லு.'' அதட்டலின் வேகம் அதிகமாக இருந்தது.

''ஒண்ணும் எடுத்துண்டு போகலையே அப்பா!'' - கிட்டுவின் வாய் தவறி வந்துவிட்டது 'எடுத்துண்டு போகலையே' என்ற சொல். சொன்ன பிறகுதான் உதட்டைக்



கடித்துக்கொண்டான். பிள்ளையாரை மனமாரச் சபித்தான்.

‘‘நீ எடுத்துண்டு போகலேன்னு வேலைக்காரப் பையன் துளசி எடுத்துண்டு போயிட்டான். நான் எத்தனை தரம் உனக்குச் சொல்லியிருக்கேன். குளிக்கப் போகும்பொழுது கண்ட இடத்தில் உன் அழுக்குச் சட்டைகளைக் கழற்றிப் போடாதேன்னு. இன்று காலையிலே நீ கழற்றிப் போட்ட நிஜாரையும், சட்டையையும் அந்தப் பையன் திருடிண்டு போயிட்டான். வரட்டும் அந்தப் பயல். விசாரிக்கிறேன். நீ போய், சாப்பிட்டுவிட்டு படி.’’

அப்பாடா! நீண்ட பெருமூச்சு விட்டான் கிட்டு. போன உயிர் திரும்பி வந்தது. கிட்டு தெருக்கோடிப் பிள்ளையாரை மனமார வாழ்த்திக்கொண்டே சாப்பிடச் சென்றான்.

மறுநாள் மாலை. பள்ளிக்கூடம் விட்டதும் வீடு திரும்பும்போது பிள்ளையாருக்குக் கற்பூரம் வாங்கிக் கொளுத்தக் கடைக்குச் சென்றான். எதிரே ரங்கராட்டினம் இருந்தது. அதில் அவன் வகுப்பு மாணவர்கள் ஏறிக்கொண்டு சந்தோஷத்துடன் சவாரி செய்துகொண்டிருப்பது கிட்டுவுக்குத் தெரிந்தது. உடனே, ‘‘பிள்ளையாரே! இன்னொரு நாளைக்கு உனக்குக் கற்பூரம் வாங்கிக் கொளுத்துகிறேன்’’ என்று சொல்லி இரண்டணாவைக் கொடுத்து ராட்டினத்தில் ஏறி ‘ஜம்’ என்று சுற்றினான்.

சமீபத்தில் வெளியான ஒரு சினிமாப் பாட்டைப் பாடிக்கொண்டே குதுகலத்துடன் வீட்டிற்குப் போனான் கிட்டு.

சட்டையைக் கழற்றி விட்டு திரும்பும் சமயத்தில் ‘பளார்’ என்று முதுகில் அறை விழுவதைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பினான் கிட்டு. அவன் அப்பா ரௌத்திராகாரமாக இருந்தார்.

‘‘ஏண்டா, எத்தனை நாளா இந்த வேலை?’’ கிட்டுவின் காதுகளைப் பிடித்துக்கொண்டு நன்றாக முறிக்கினார்.

‘‘என்னப்பா, ஒண்ணும் புரியலையே. ஏன் என்னை அடிக்கறே?’’ கிட்டு விம்மலுக்கு இடையில் கேட்டான்.

‘‘உனக்கு எப்படிப் புரியும்?’’ இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் புரிய வைக்கிறேன். என் பர்ஸிலிருந்து ஒரு ரூபாய் நோட்டு எடுத்தியா?’’

‘‘சத்தியமா எடுக்கலைப்பா.’’

‘‘சத்தியம் வேறே சொல்றியா? இதைப் பாரு!’’ - கசங்கிய காகிதத்தை அவன் முகத்தின் முன் நீட்டினார். அதில், ‘‘பிள்ளையாரே . . . . கற்பூரம் வாங்கிக் கொளுத்தறேன்’’ என்று நேற்று இவன் வகுப்பில் எழுதியது இருந்தது.

பிள்ளையார் அவர் சக்தியைக் காண்பித்துவிட்டார்.

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

எஸ். ஜயபாலன், கொழும்பு.

ஆகாய விமானம் பறக்கிறதே. அது எப்படி விழாமல் இருக்கிறது?

ஓர் ஆகாய விமானத்தின் முன் தள்ளி (Propellor - புரொப் பெல்லர்) வேகமாகச் சுழலும் போது விமானம் காற்றின் வழியாக இயங்குகிறது. அப்படி இயங்குவதைக் காற்று தடுக்க முயல்கிறது. ஆகவே ஏரோப்ளேனின் இறக்கைகளின் மீது ஒரு விசை செலுத்தப்படுகிறது.

அந்த இறக்கைகள் சற்றே சாய்வாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் காற்று அவைகளின்மீது செலுத்தும் விசையானது, இறக்கைகளை மேல் நோக்கித் தள்ளும் உந்துவிசையாக (Thrust) மாறுகிறது. இந்த உந்துவிசை விமானத்தின் பளுவைத் தாங்கிப் பிடிக்கிறது; அதைக் கீழே விழவொட்டாமல் தடுக்கிறது.

எம். வாசுதேவன், கிருஷ்ணகிரி.

எறும்புக்குக் கண் உண்டா?

எறும்புகளுக்குப் பொதுவாகத் தலையின் நடுவில் மூன்று சாதாரணக் கண்களும், தலையில் பக்கத்துக்கு ஒன்றாக இரண்டு கூட்டுக் கண்களும் உண்டு. சில வகை எறும்புகளுக்குச் சாதாரணக் கண்களும் கிடையாது, கூட்டுக் கண்களும் கிடையாது. கூட்டுக் கண்கள் ஒன்றிலிருந்து ஒன்று அதிக தூரம் விலகி, கிட்டத்தட்டக் காது இருக்க வேண்டிய இடத்தில் இருக்கும்.

அந்தக் கண்களை எறும்பினால் அசைக்க முடியாது. அதாவது பக்கவாட்டத்திலோ, மேலோ, கீழோ கண்ணின் விழியை நகர்த்திப் பார்க்க முடியாது. ஆனால், அந்தக் கூட்டுக் கண்கள் (Compound Eyes) ஒவ்வொன்றிலும் பல லென்ஸுகள் (Lenses) ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக அமைந்திருக்கும். ஆண் எறும்புகளில் இந்த லென்ஸுகள் அதிகமாகவும், பெண் எறும்புகளில் சற்றே குறைவாகவும், அலி (அல்லது வேலைக்கார) எறும்புகளில் இன்னும் குறைவாகவும் இருக்கும். ஒரே ஒரு உதாரணம். ஒருவகை எறும்பில் ஆண் எறும்பின் கூட்டுக் கண்களில் 1200 லென்ஸுகளும், பெண் எறும்பின் கண்ணில் 830 கூட்டு லென்ஸுகளும், வேலைக்கார எறும்பின் கண்ணில் 600 லென்ஸுகளும் இருக்கின்றன.

அவற்றின் துணையால் அவை பல திசைகளிலும் கண்ணில் விழியைத் திருப்பாமலே பார்க்க முடியும். ஆனால், இந்த லென்ஸுகளின் வடிவத்தை மாற்றிக் கொள்ளும் திறமை அவைகளுக்கு இல்லை. ஆகையால் மிகவும் கிட்ட உள்ளவைகளை எறும்புகளால் காண முடியாது என்று சொல்லுகிறார்கள். அப்போது அவைகளின் உணரிழைகள் (Feelers; Antennae) உதவுகின்றன.

மூர்த்தி, ஸ்ரீரங்கம்.

கிட்டப் பார்வை (Short sight) என்றால் என்ன? எட்டாப் பார்வை (Long-sight) என்றால் என்ன? இவைகள் எப்படி ஏற்படுகின்றன?



ஒரு பொருளைப் பார்க்கும் போது நம்முடைய கண்ணில் உள்ள லென்ஸ் (Lens) அந்த நிஜ பிம்பத்தை (Real image) இயற்று கிறது. இந்தப் பிம்பம் கண்ணின் லென்ஸுக்கும் பின்புறமாகப் படுகிறது.

சாதாரணக் கண் பார்வையை உடைய ஒருவனுடைய கண்ணில், அப்படி இயற்றப்படும் நிஜபிம்பம் கண்ணின் விழித் திரையின்மீது (Retina) சீராகப் படியும். அப்போது அவன் அந்தப் பொருளைத் தெளி வாகக் காணுவான்.

கிட்டப் பார்வை (Short sight) என்னும் குறைபாடு உடைய ஒருவனுடைய கண்ணின் லென்ஸ் மட்டுக்கு மிஞ்சிக் கனமாக இருக் கும். ஆகையால் அது இயற்றும் பிம்பம் விழித் திரையின் மீது படியாமல், அதற்குச் சற்று முன்புறமாகப் படியும்.

எட்டப் பார்வை (Long sight) என்னும் குறைபாடு உடைய ஒரு வனுடைய கண்ணின் லென்ஸ் மட்டுக்கு மிஞ்சி மெல்லியதாக இருக்கும். ஆகையால், அது இயற்றும் பிம்பம் விழித்திரைக்குச் சற்றுப் பின்புறமாகப் படியும்.

இந்த இரண்டு நிலைகளிலும் பொருள் தெளிவாகத் தெரியாது. அது மங்கலாகத் தோன்றலாம்: அல்லது தெரியாமலே இருக் கலாம்.

கண்ணின் குறைபாட்டுக்கு ஏற்றபடி தக்க லென்ஸுகளை உபயோகித்து இந்தக் குறைகளைத் திருத்திக்கொள்ளலாம். கிட்டப் பார்வையைத் திருத்துவதற்குக் குழி - வில்லையை அல்லது குழி லென்ஸை (Concave lens) உபயோ கிக்க வேண்டும். எட்டப்பார்வை யைத் திருத்துவதற்குக் குவி - லென்ஸை அல்லது குவி-வில்லையை (Convex lens) உபயோகிக்க வேண் டும்.

ஏ. டி. ரங்கநாதன், வெற்றியூர்.

ஏ. ஸி. டைனமோ என்றால் என்ன? எதற்கு உதவுகின்றன? கண்டு பிடித்தவர் யார்?

டைனமோவின் தத்துவம் பாரடே (Faraday) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

மின்சாரத் துறையில் வேலை செய்துவந்த எத்தனையோ எஞ்ஜினி யர்களால் அந்தத் தத்துவமும், அதன் செயல் முறையும் வளர்க் கப்பட்டு, மிகவும் அபிவிருத்தி யடைந்தன.

ஒரு காந்தத்தின் துருவங்களுக்கு நடுவில் கம்பிச் சுருள் ஒன்றைச் சுழலச் செய்தால், இரு திசை மின்சார ஓட்டம் உண்டாகும். இதற்கு ஆல்டர்னேட்டிங்கர்ரண்டு (Alternating current) என்று பெயர் இதன் முதல் எழுத்துக்களைக் கொண்டு ஏ. ஸி. என்று இதைக் குறிப்பிடுவது வழக்கம்.

மற்றொரு வகையான மின்னோட் டத்துக்கு ஒரு திசை மின்சார ஓட்டம் என்று பெயர். இதை டைரெக்ட் கர்ரண்டு (Direct current) என்று சொல்லுகிறார்கள். இதன் முதல் எழுத்துக்களைக்கொண்டு டி. ஸி. என்று இதைக் குறிப்பிடுவது வழக்கம்.

மின்சார விளக்குகளை ஏற்று வதற்கும், மின் அடுப்பு முதலியவை களில் வெப்பம் உண்டாக்குவதற் கும், சாதாரணமாக மின்சார விசிறிகளைச் சுழலச் செய்வதற்கும் ஏ. ஸி. மின்னோட்டத்தை உபயோ கிக்கிறார்கள். ரசாயனத் தொழிலிலும், ரெயில்கள், டிராம் வண்டிகள் முதலியவைகளை ஓடச் செய்வதற்கும், சிற் சில வகை மின்சார விசிறிகளைச் சுழலச் செய்வதற்கும் டி. ஸி. மின்னோட் டத்தை உபயோகிக்கிறார்கள்.

இரு திசை மின்னோட்டத்தை இயற்றுவதற்கு உபயோகிக்கப் படும் மின்சாரக் கருவிக்கு ஏ. ஸி. டைனமோ என்று பெயர்.

ஒரே திசையாக ஓடும் மின்னோட்டத்தை இயற்றுவதற்கு உபயோகிக்கப்படும் மின்சாரக் கருவிக்கு டி. ஸி. டைனமோ என்று பெயர்.

இரு திசை மின்சார ஓட்டத்தை சிற்சில கருவிகளின் மூலமாக ஒரு திசை மின்சார ஓட்டமாக மாற்றி அமைக்கமுடியும்.

வி. வி. முத்துக்குமாரசாமி, சென்னை 3.

ரெயில் எஞ்ஜினைக் கிளப்ப என்ன செய்கிறார்கள்?

ரெயில் எஞ்ஜினைக் கிளம்பச் செய்வதற்கு ரெயில் எஞ்ஜினின் கொதி காலத்தில் இயற்றப்படும் நீராவியைச் சக்கரங்களின் பக்கத்தி லுள்ள சிலிண்டர் (Cylinder) என்னும் கருவிக்குள் புகவிடுகிறார் கள். நீராவி சிலிண்டரில் ஓர் ஓர மாக முதலில் உள்ளே வரவிடப் படுகிறது. பிறகு, மறு ஓரமாக உள்ளே வரவிடப்படுகிறது. இப்படி மாறி மாறி சிலிண்டரின் உள்ளே வரவிடப்படும் நீராவி யானது சிலிண்டருக்குள்ளே வைக்கப்பட்டிருக்கும் பிஸ்டனை (Piston) முன்னும் பின்னுமாகத் தள்ளுகிறது. சிலிண்டரில் மாறி மாறிப் புகும் நீராவியை வெளியே செல்ல விடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நீராவியால் பிஸ்டன் முன்னும் பின்னுமாகத் தள்ளப்படும்போது, அதோடு இணைக்கப்பட்ட இரும்புச் சட்டங்களின் மூலமாக அது சக்கரங்களைச் சுழலச் செய்கிறது. எஞ்ஜின் கிளம்புகிறது.

எஞ்ஜின் நிற்க வேண்டுமானால், நீராவியைச் சிலிண்டருக்குள் புக விடாமல் அடைத்துவிடுகிறார்கள். பிறகு எஞ்சினிலிருந்து பிரேக்கைப் (Brake) போடுகிறார்கள். இந்த பிரேக்கு, தொடரிலுள்ள வண்டி களில் எல்லாம் வைக்கப்பட்டிருகின் றன. இவை அழுத்தமுற்ற காற்றி னால் வேலை செய்கின்றன. இந்தக் காற்று ரெயில் வண்டித் தொடரில் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை கெட்டியான குழாய்களின் வழியாகச் செல்லுகிறது.

பிரேக்குகளுக்கு வேண்டிய அழுத்தம் உள்ள காற்று எஞ்ஜி னில் இயற்றப்படுகிறது. எஞ்ஜின் ஒட்டி பிரேக்கைப் போடும்போது இந்தக் காற்றின் துணையால் அந்த ரெயில் தொடரிலுள்ள (Train) ஒவ்வொரு வண்டியிலும் உள்ள சக்கரங்களின்மீது பிரேக்கு அழுத் திப் பிடிக்கும். சக்கரம் சுழலுவது வரவர மெதுவாகி, கடைசியில் நின்று போகும். ரெயில் தொடரும் நின்றுவிடும்.

டி. என். தியாகராஜன், கோயம்புத்தூர்.

ரேடியோவிற்கு 'எர்த்'தும், 'ஏரியலும்' வைப்பதன் நோக்கம் என்ன?

ரேடியோவை அனுப்பும் கருவி களிலும், ஏற்கும் கருவிகளிலும் முதலில் ஏரியலையும் (வான் கம்பியையும்) எர்த்தையும் (நிலப் பிணைப்பையும்) வைத்தவர் மார்க் கோனி.

இப்படிச் செய்தால்தான் மின் அலைகளை நெடுந் தூரம்வரை அனுப்ப முடியும்; நெடுந் தூரங் களிலிருந்து ஏற்கவும் முடியும். அப்படியென்றால், அலை செலுத்தி யால் (Wave transmitter) மிகவும் சக்தியுடைய அலைகளை உண்டாக்க முடியும்; சக்தி குறைந்த அலைகளை யும்கூட ஏற்கும் கருவியால் உணர்ந்து கொள்ள முடியும். அதாவது, 'ஏரியல்', 'எர்த்' என்னும் அமைப்புக்களைப் பொருத் துவதால், அலை-செலுத்தும் (ஒலி பரப்பும்) கருவிகளும், அலை-ஏற்கும் (ஒலி கேட்கும்) கருவிகளும் நன்றாக வேலை செய்ய முடியும் என்பது பொருள்.

பு. கண்ணன், மதுரை.

ஏதோ ஒரு மலையில் புவியீர்ப்பு மேல் நோக்கி இருக்கிறதாமே? அது எந்த மலை?

அப்படி ஒரு மலையும் கிடை யாது. ஏனென்றால் புவியீர்ப்பு (Gravitation) என்பது பூமி செலுத் தும் (இழுக்கும்) ஆகர்ஷண சக்தி, அல்லது கவர்ச்சி. கவர்ச்சி இழுக்குமே தவிரத் தள்ளாது.

ஆனால், மலை பூமியிலிருந்து மேல் நோக்கியிருப்பதால், அதன் அருகிலுள்ள பொருளை மலை தன் பக்கமாக-அதாவது பக்க வாட்டத் தில் - கவர முடியும். இப்படி மலைகள் ஊசலியைக் (Pendulum) கவர்ந்து இழுக்கும் விசையைக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அராபியக் கதை — பாரஸீக ரோஜா — சித்திரம்: ஸாமி

தாதி! இளவரசியை நான் ரகசியமாகப் பார்க்க வேண்டும்!
ஹா! மர்ஜாமனா! இதோ!
இளவரசி! தங்கள் ஒன்றுவிட்ட சகோதரன்! தாதி வேடத்தில் வந்திருக்கிறார்!
போ! உடனே அவனை அழைத்து வா!
சகோதரி! உன் உடம்பு இப்படித் துரும்பாகிவிட்டதே!
அண்ணா! நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும். என் கதையைக் கேள்!
பூதூர்! உன்கனவு அதிசயமாக இருக்கிறது. எப்படியும் அவனை நான் கண்டு பிடிப்பேன்!
அப்படியானால் இந்தா! இது தான் அந்த மோதிரம்
மர்ஜாமன் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு வேண்டிய அளவு பொன்னும் மணியும் எடுத்துக் கொண்டு மறுநாளே பயணம் புறப்பட்டான். ஊர் ஊராக அலைந்தான். தேசம் தேசமாகச் சுற்றினான். மாதங்கள் தான் ஓடின.
அதோ! சத்திரம்! அங்கே சிறிது இளைப்பாறலாம்!

(தொடரும்)

எங்கள் பகுதி

*களிப்புற்றேன்!

1. அடடா! அடடா! பிரமாதம்!
அட்டைப் படமே வெகுஅருமை!
கொடுகொடு என்றது என்மனது
கொடுத்தேன் இரண்டணு!
இன்புற்றேன்.
2. பிரித்தேன் கண்டேன்
ஆமையாரை!
பேசினர் சிரிக்கச் செய்திட்டார்!
அடுத்த தாளில் 'டிங்கினுனே'
அழகிய நிகழ்ச்சி காட்டிட்டார்!
3. "உத்தம புத்திரன் என்போலே
உலகில் பலரும் இருந்திட்டால்
மெத்தவும் நாடு முன்னேறும்
மிகையில்லை" என்ருன் தர்மராஜன்!
4. நாட்டுப் பாடலைக் கவியரங்கில்
நமக்குத் தந்து உதவியவர்
பாட்டு எழுதும் பாலகரோ?
பகருவ தென்ன அவரதிலே?
5. வழக்கம்போலே புதிர்விடைகள்
உவகை யூட்டும் தொடர்கதைகள்
கருத்தைக் கவரும் சிலதுணுக்கு
கண்ணன் தரவே களிப்புற்றேன்!

—ர. தங்கவேலன், திருச்சி.

பிரமாதம்!

பதினைந்தாம் தேதி எப்பொழுது வரப்போகிறது என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தேன். 15-ஆம் தேதியும் வந்தது; கண்ணனும் வந்தான்!

இந்தத் தடவை வெறுமேயா வந்தான்! பாரதஜோதி நேருவிடம் ஒரு சிறுவன் 'ஆட்டோகிராப்' வாங்கும் படத்தைத் தாங்கியல்லவா வந்தான்!

'ஆவடிக்குப்போய் நேருஜியை நேரில் தரிசிக்க முடியவில்லையே' என்று நான் வருந்தியது உண்டு! ஆனால் அந்தச் சிறுவனின் அதிருஷ்டம் அவன் நேருஜியை நெருங்கி 'ஆட்டோ கிராப்'பும் அல்லவா பெறுகிருன்!

வழக்கமாக நான் கண்ணனைப் பத்திரப்படுத்தி வைப்பதுபோல் இந்தத் தடவை செய்யவில்லை! ஏனென்ருல் மேலட்டையைப் 'பிரேம்' போட்டுவிட்டேன்.

அருமையான சம்பவம் கண் முன் நடப்பதுபோலவே தோன்றுகிறது. லீடர்மணியில் வரும் அந்தச் சிறுவன் சென்னையில் படும் அநுபவம் ரசமாக வர்ணிக்கப் படுகிறது.

அநாதாசிரமம் என்ற பெயரில் நடக்கும் ஊழல்களையெல்லாம் லீடர்மணியில் அம்பலப்படுத்துகிருர் ஆர்வி.

தமிழ் வளர்த்த தாத்தாவின் கதை என் போன்ற சிறுவர்களுக்குப் படிக்கப் படிக்க இனிமையாக இருக்கிறது. குப்பையிலே மாணிக்கம் போல வந்து பிறந்திருக்கிருன் குப்பன் செட்டியாரின் மகன் தர்மராஜன்! அதை அருமையாக எடுத்துக் கூறி ஒரு நல்ல கதை சொல்கிருர் ப. ரா.

பிசாசுக் கதையைச் சொல்லி, குழந்தைகளைப் பயப்படுத்துவதைக் கண்டிக்கிருர் நடனு.

விரோதியாயிருந்தாலும் எதிரியிடம் நல்ல குணங்கள் இருந்தால், அதைப் போற்றுவது சுத்த வீரனின் குண விசேஷம். அதைக் குணக் குன்று ரசமான முறையில் விவரிக்கிறது.

நமக்குத் தெரியாத விஞ்ஞான ரகசியங்களையெல்லாம் விவரமாகத் தருகிருர் பேராசிரியர்விஞ்ஞானம்.

பாலர்கவி அரங்கம், சிறுவர்களைக் கவி எழுதத் தூண்டுவதாக அமைந்திருக்கிறது.

பாரஸீக ரோஜா விறு விறுப்பாக இருக்கிறது. சிறுவர்கள் ரசிக்கும் பகுதி இது.

ஜனுவின் சந்திரகிரிக்கோட்டையைத் தொடர்ந்து படிப்பவர்கள் கதை மனோரஞ்சகமாகவும், விறு விறுப்பாகவும் இருப்பதை உணர்வார்கள்.

இவ்வளவு நல்ல விஷயங்கள் அடங்கிய கண்ணன் பிரமாதமாக அமைந்திருக்கிறது.

—எஸ். கே. மூர்த்தி, மேல்குமாரமங்கலம்.

கருத்துப் பட்டகம்

மனிதருள் மாணிக்கமாகத் திகழும் நேருவின் புகைப்படம்

---

*பரிசு பெற்ற கடிதம்.

அட்டையில் அழகான முறையில் பொருத்தப்பட்டிருக்கிறது.

'லீடர்மணி'யின் தற்போதைய நிலைமையைக் கண்டால் அவனிடத்தில் பச்சாதாபம் ஏற்படுகிறது. 'ஆர்வி' கதையை ஊகித்தறிய முடியாவண்ணம் செலுத்திக் கொண்டு போகிறார்.

கதையிலே ஒரு கருத்தையும், அந்தக் கருத்திலே ஒரு நீதியையும் வைத்து, சுவை குன்றாமல் எழுதப் பட்டிருக்கிறது 'உத்தம புத்திரன்' என்ற கதை.

'பிசாசு' என்ற கதையின் தலைப்பைக் கண்டவுடனேயே அதைப் படித்துப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் நம் மனத்தில் எழுகிறது. சிறிய கதையை வைத்துச் சிக்கனமாகச் சித்திரித்துள்ளார் ஆசிரியர்.

'தமிழ்த்தாத்தா'வின் கதையை இதுவரை படிக்காத நான் அவரது கதையைப் படித்து முடித்தவுடன் வயிறு குலுங்கச் சிரித்தேன்.

பேராசிரியர் விஞ்ஞானம் கேட்ட கேள்விக்குத் தக்க பதிலை 'பளிச் பளிச்' என்று சொல்லியிருக்கிறார். வள்ளியப்பாவின், 'ஆமையாரே!' என்ற கவிதை போற்றத்தக்கது.

பாலர்கவி அரங்கத்தில் வான வில்லைப்பற்றிய கவிதையே சிறந்து விளங்குகிறது. 'புதிர்க் கேள்விகள்' என்ற பகுதி புதுமையுடன் மிளிர்கிறது. இவ்விதழில் அருமையான சம்பவம் அருமையாக இல்லை.

சந்திரகிரிக்கோட்டை விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 'பாரஸீக ரோஜா' நிமிடத்திற்கு நிமிடம் வரிக்கு வரி மனத்தில் பலவித உணர்ச்சிகளை உண்டாக்கும்படி உருவாக்கப் பட்டுள்ளது.

'குணக்குன்று' கதை ஏ ஒன்!

எங்கள் பகுதி வாசகர்களின் விமர்சனக் கருத்தைப் பிரதி பலிக்கும் 'கருத்துப் பட்டக'மாகத் திகழ்கிறது.

—கே. என். மகாலிங்கம், கோனேரி ராஜபுரம்.

கோகுலக் கண்ணன்

அட்டைப் படத்தைக் கண்டதும் எனக்கேற்பட்ட இரு உணர்ச்சிகள்: பெருமை, பொறாமை! நம்மைப் போன்ற ஒருவன் 'மணி தருள் மாணிக்க'த்தை நெருங்கும் பேறு பெற்றானே என்ற பெருமை! 'அடடா! அதுபோல் கிட்டவில்லையே நமக்கு' என்ற பொறாமை! இருந்தாலும் நண்பன் மகிழ்வில் எனக்கும் பங்கு.

'தமிழ்த் தாத்தா' மூலம், அவர் தொண்டினையும், பெருமையையும் நன்கு அறிந்துகொள்ள முடிந்தது, 'டிங்கினானே' கதையை வீட்டில் எல்லோரும் படித்தோம். வீடு முழுதும் சிரிப்பு மயமாகிவிட்டது.

கதையின் முக்கால் பகுதி வரை குப்பன் செட்டியார்மீது கடுங் கோபம் உண்டாகிறது! முடிவில் இரக்கமேற்படுகிறது. உருக்கமாகச் சித்திரித்த ஆசிரியருக்கு நன்றி.

'எலக்டிரிக்-ஷாக்' என்றறியாமல் கணபதி கதறுவதும், அம்மா அழுவதும், முடிவில் அப்பா விளக்குவதும் நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கும்பகர்ணன் என்றால் கொடுமையின் அவதாரம், தூக்கத்தின் இருப்பிடம் என்றிருந்த நாங்கள் அருங்குணங்கள் அவனிடம் உண்டு என்பதை நன்கு அறிகிறோம்.

மணிபர்ஸை இழந்த மணி படும் பாடு மனத்தை உருக்குகிறது. கங்கன்மீது கோபத்தை உண்டாக்குகிறது.

'முதல் தேதி ஓடி வராதா?' என்று 'ரோஜா'வின் விறுவிறுப்பு எண்ணச் செய்கிறது; அந்த எண்ணத்தை இரட்டிப்பாக்குகிறது சந்திரகிரிக்கோட்டை.

ஆமையார் கவிதை அருமையாக உள்ளது. வானவில் என்ற பாட்டும் பலே ஜோர்! எளிய நடை.

புத்தியை நன்கு சாணை பிடிக்கிறது புதிர்க் கேள்விகள். விஞ்ஞான அறிவைப் பரப்புகிறது 'கேளுங்கள் சொல்கிறேன்!'

கோகுலக் கண்ணன் வெண்ணெய், பால், தயிரைத் தானும் உண்டு, நண்பருக்கும் வயிறு முட்டக் கொடுத்தான். அதைப் போல எங்கள் 'கண்ணன்' கதைகள் என்றும் வெண்ணெயையும், அறிவு என்னும் தயிரையும், கவிதை என்ற பாலையும் அள்ளி அள்ளி அளிக்கிறான்!

ரா. சுந்தரராஜன், அழகர்கோவில்.

பாலர் கவி அரங்கம்

கண்ணன் குறும்பு

சின்னக் குழந்தையாய் கண்ணன் இருக்கையில்
செய்த குறும்புகள் பற்பலவாம்—வெண்ணெய்
தின்ன அவன் செய்த ஜாலத்தை யெல்லாம்
சிரித்து மழுப்பியே சென்றதைப் பார்.

ஆய்ச்சி ஒருத்தியின் வீட்டினில் சென்றோர் நாள்
ஆவலாய் வெண்ணெயைத் தின்றிருந்தான்
ஆய்ச்சியும் கண்டோடி வந்திடவே அவன்
அங்குமிங்கும் சுற்றி நோக்கலானான்.

''யாரடா பயல் நீ? இங்கென்ன செய்கின்றாய்?
யானில்லா வேளையில்'' என்றிடவே—அவன்
''பாரில் பலராமன் தம்பியம்மா என்னை
பாலன் கண்ணன் என்றும் சொல்லிடுவார்'' என,

''வெண்ணெய் உறியினில் வேலையென்ன?'' என்று
வேகமாய் ஆய்ச்சியும் கேட்டிடவே—அந்தக்
கண்ணன் பயந்தவன் போலவே மெள்ளக்
கண்கள் கலங்க விழித்தபடி,

''வெள்ளைப் பசு வொன்றின் கன்றினைக் காணாது
வீடு தோறும் தேடி வந்தேனம்மா—இங்கு
மெள்ளத் தலை நீட்டிப் பார்ப்பதுபோல் வெண்ணெய்ப்
பானையில் தோன்றிட ஓடி வந்தேன்.''

என்று சிரித்தனன் கண்ணனுமே ஆய்ச்சி
சேர்ந்து சிரித்துச் சினம் தவிர்த்தாள்—அவன்
தின்றிட வெண்ணெய் நிறையத் தந்தே—அவன்
நெற்றியில் முத்தம் பல கொடுத்தாள்.

சின்னக் கண்ணன் என்றும் சின்னஞ்சிறுவர்க்கோர்
சீரிய தோழனாய் நின்றிடுவான்—அவன்
வண்ணக் கதைகளை நாம் படித்து என்றும்
வாழ்த்திடுவோம் வளம் பெற்றிடுவோம்.

—**'காண்டிபன்'**, **கடிச்சம்பாடி.**

போட்டோ



1. இந்தக் கொடிகளின் அடையாளம் எதைக் குறிக்கிறது?

   1. ஸ்கவுட் சிக்னல்
   2. ரெயில்வே சிக்னல்
   3. கப்பல் சிக்னல்



2. இது என்ன விளக்கு?

   1 பவர்லைட்
   2 குளோபர் விளக்கு
   3 லஸ்தர் விளக்கு

3. இந்த வலையின் உபயோகம் என்ன?

   1 மீன் பிடிக்க
   2 பட்டுப் பூச்சி பிடிக்க
   3 குருவி பிடிக்க.



4. இவை யார் பாதங்கள்?

   1 சாரநாத் - புத்தர் பாதங்கள்
   2 சாமுண்டிமலை - மகிஷாசுரன் பாதங்கள்
   3 சரவண பெளகோளா - கோமடீசுவரர் பாதங்கள்

க் வி ஸ்

5. இது எதன் கதிர்?
   1 நெல்
   2 கோதுமை
   3 கேழ்வரகு



6. இது என்ன பிராணி?
   1 பனங்காட்டு நரி
   2 அல்சேஷியன் நாய்
   3 ஓநாய்



7. இது என்ன குலை?
   1 திராக்ஷை
   2 பிரப்பம்பழம்
   3 அரிநெல்லிக் கனி



8. இது என்ன யந்திரம்?
   1 ரோட் ரோலர்
   2 டிராக்டர்
   3 புல் டோஸர்.

விடை: 40-ஆவது பக்கம்.

சந்திரகிரிக்கோட்டை

'ஜனு'

விமலன் ஆக்ரோஷத்துடன் அறுந்து விழுந்த லகானை எடுத்து முடிபோட்டுக்கொண்டான். நீலவேணி ஒரு சிலுப்புச் சிலுப்பிக்கொண்டு ஒரு முறை சுற்றிக் கொடுத்தது. விமலன் தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். அவனைத் தவிர வேறு யாரும் பரபரப்பு அடைந்ததாகவே தெரியவில்லை. அவனுடைய ஆத்திரம் உச்ச நிலையை அடைந்தது.

''ராஜகுமாரனே, நீர் சுத்த வீரனாக இருக்கலாம். ஆனால் அதே போல இங்கிருப்பவர்களும் உம்மைப்போன்ற வீரர்கள்தாம்! புரிகிறதா?'' என்று அந்த இளைஞன் வெகு அலட்சியமாகக் கூறினான். இத்தனைக்கும் அவன் கையில் வாள்கூட இல்லை.

விமலன் முகம் சிவக்க, ''அடேடே! நீங்கள் எல்லாரும் வீரர்களா? கொள்ளைக் கூட்டத்தார்கள் என்றல்லவா நினைத்தேன்?'' என்றான்

''வீரனையும் கொள்ளைக்காரனையும் அறிந்துகொள்ளக்கூட முடியாத ராஜகுமாரரா நீர்? பேஷ், பேஷ்!'' என்று சிரித்தான் அந்த இளைஞன்.

அந்த இளைஞனுடைய முகத்தில் மீசைகூட அரும்பவில்லை. பால் வடியும் முகம் என்பார்களே, அது அந்த முகத்துக்குத்தான் பொருந்தும். மெழுகுப் பொம்மை போன்ற கட்டிளமை வாய்ந்த மேனி. வீரனுக்கு ஏற்ற உடைகள் எல்லாம் வேஷம் போட்டதுபோல் இருந்தது. அந்தக் கண்களில் வீசிய ஒளி விமலனுக்கு வேற்றுமை உணர்ச்சியை உண்டாக்கவில்லை. எந்த ஜன்மத்திலோ, எங்கோ அந்தக் கண்களின் பார்வையை அவன் அறிந்திருப்பதுபோலவே தோன்றியது. ஆனால் மிடுக்காகப் பேசும் அவனுடைய பேச்சுக்கள் ஈட்டிகொண்டு குத்துவதுபோல இருந்தன!

''கூட்டமாக வந்து ஒருவனை வழி மறிப்பதுதான் உங்களுடைய வீரமோ?''

''இல்லை, ஐயா இல்லை! அது வீரர்களுடைய செயல் அன்றுதான். ஆனால், எடுத்த எடுப்பிலேயே ஒருவரை மரியாதை இல்லாமல், ஏக வசனத்தில், அலட்சியமாக அழைப்பதுதான் வீரமோ? நன்றாக யோசித்துப் பாருங்கள். உங்களை யாரும் வலுவில் வழி மறிக்கவில்லை. உங்கள் நடத்தையேதான் அதற்குக் காரணம்! சாமர்த்தியமும் வீரமும் இருந்தால் எங்களைத் தாண்டிக்கொண்டு செல்லலாம். உம்; எங்கே, பார்ப்போம்!'' என்றான் அந்த இளைஞன். அவனுடைய குரலிலே ஏதோ ஒரு கரகரப்பு இருந்தது.

இவர்களைத் தனி ஒருவனாக நின்று வெல்வது முடியாத காரியம் என்று விமலனுக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் அதற்காக அவமானப்படவும் அவன் விரும்பவில்லை. தன்னைவிட வயதிலும் அநுபவத்திலும் சிறியவன்போலிருந்த இந்த இளைஞனுடைய பேச்சு ஒரு விதத்தில் நியாயமாகத்தான் இருந்தது. 'ஆனாலும் வழியோடு போகிற ஒருவனை, இவர்கள் யார், என்ன என்று கேட்பார்களாம்; நான் நீ யார் என்று கேட்கக் கூடாதோ? இவர்களுக்கு என்னைக் கேட்க என்ன உரிமை வந்தது?' என்று நினைத்தான்.

விமலனுடைய நெஞ்சிலே ஓடிய எண்ணங்களை அப்படியே அறிந்துகொண்டவன்போல, ''என்ன யோசிக்கிறீர்கள், ராஜகுமாரரே! இது எங்கள் ராஜ்யத்தின் எல்லை. அந்நியர்களை யார் என்று கேட்க எங்களுக்கு உரிமை உண்டு; நிறுத்தி வைக்க எங்களுக்கு உரிமை

உண்டு; கடமையும் உண்டு. அதனால் வேறு ஏதாவது இருந்தால் யோசனை செய்யுங்கள்!'' என்றான் அந்த இளைஞன்.

என்ன இறுமாப்பான பேச்சு! விமலன் அசந்து போய்விட்டான்.

பிறகு சமாளித்துக்கொண்டு, ''மற்றவர்கள் வீரர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நீ வீரன்தான் என்று தெரிகிறது. அதாவது வாய்ப் பேச்சில் நீ மகா பெரிய வீரன் என்று மட்டும் தெரிகிறது. உங்களிடம் நான் யார் என்று சொல்லப் போவதில்லை. உங்களில் யார் பெரிய, சிறந்த, உயர்ந்த வீரனோ அவனோடு போர் செய்து பார்க்க நான் ஆசைப்படுகிறேன்!'' என்றான் விமலன்.

''இதுவும் என்ன, முறி எடுக்கும் போட்டி என்று எண்ணிவிட்டீர்கள் போலிருக்கிறது; அப்படித்தானே! பிறர் கண்ணில் மண்ணைத் தூவுகிற போட்டியல்லவா அது? அது சாளுவ நாட்டு அரச குமாரர்களான இரட்டையர்களுடனேயே இருக்கட்டும். எங்களுக்கு வேண்டாம். ஆனால் இங்கே அத்துமீறி எங்கள் எல்லையில் நுழைபவர்களை எங்கள் இஷ்டப்படிதான் நாங்கள் நடத்துவோம். உங்களுடைய வீரத்தை நீங்கள் வேறு வகையில் காட்டலாம்!'' என்று அந்த இளைஞன் மிக இளக்காரமாகக் கூறினான்.

''ஓஹ்ஹோ!'' என்று விமலன் கைகள் இரண்டையும் மார்பில் கட்டிக்கொண்டு ஒரு கணம் யோசித்தான். அடுத்த கணம் அவனுடைய கால் குறிப்பை உணர்ந்த நீலவேணி அந்த இளைஞனுடைய குதிரையின் சமீபமாக நெருங்கியது. விமலன் முகத்திலே வீராவேசத்தின் நகை ஒளி ஒன்று நெளிந்து ஓடியது. என்ன நடக்கப்போகிறதோ என்று எதிர் பார்ப்பதற்குள், கைக்கு எட்டும் தூரத்துக்குள் விமலன் அந்த இளைஞனை நெருங்கிவிட்டான். அவ்வளவு வீரர்களும் உஷாராகத்தான் இருந்தார்கள். விமலன் எதிரே எதையோ பார்த்தவன் போல ஓங்கிக் கூவினான். அத்தனை வீரர்களும் அவன் பார்த்த திசையை ஒரு முறை திரும்பிப் பார்த்தார்கள். பொறி தட்டும் நேரந்தான்; ஆனால் அதற்குள் அந்த இளைஞனுடைய கைகள் இரண்டையும் பிடித்து, ஒரே செந்தூக்காகத் தூக்கித் தன் குதிரையின்மேல் இழுத்துப் போட்டுக்கொண்டான் விமலன்.

வீரர்கள் ஒன்றையும் காணாமல் திரும்பிப் பார்ப்பதற்குள் நீலவேணி அம்பு பாய்வதுபோல் முன்னால் பாய்ந்துவிட்டது. இளைஞனுடைய கைகள் இரண்டையும் பின்னங் கட்டாக முறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தான் விமலன்.

வீரர்கள் ஒரு கணத்தில் ஏமாந்து மோசம் போய்விட்டோம் என்பதை உணர்ந்தார்கள். உடனே அத்தனை பேரும் உருட்டி அடித்துக்கொண்டு போகும் புது வெள்ளத்தைப்போல நீலவேணியைத் துரத்திக்கொண்டு பாய்ந்தார்கள். ''ஹூம்! விடாதே! பிடி!'' என்ற கூச்சல் வானளாவ எழும்பியது.

நீலவேணி சற்று முன்பு நன்றாகச் சிரம பரிகாரம் செய்துகொண்டிருந்ததால் புதுத் தெம்புடன் ஓடியது. ஆனால் மற்றக் குதிரைகளோ மிகவும் களைத்திருந்தன. வாயினின்று வெண் நுரை தள்ள அவை துரத்திச் சென்றன! மேலும் நீலவேணி சரியான பாதையைவிட்டு விலகி, எதிர்ப்பட்ட குறுக்கு வழிகளிலெல்லாம் மாறி மாறிச் செல்லவே, பின்பற்றி வந்தவர்கள் திக்குமுக்கலாடினார்கள். படைத் தலைவன் தன் கோஷ்டியினரை இரு பிரிவாகச் செய்து, நீலவேணியை வலப்புறமாகவும் இடப்புறமாகவும் சுற்றித் துரத்தச் செய்தான். காடு என்றும் மேடு என்றும் மலை யென்றும் மடு வென்றும் பாராமல் நீலவேணி காற்றைக் கிழித்துக்கொண்டு ஓடியது. பின்னால் வருபவர்கள் என்ன ஆனார்களோ என்று புலப்படாதவரையில் அது ஓடிக்கொண்டேயிருந்தது.

சூரியன் மலை வாயில் விழும் சமயம். அதுவரையில் அது காட்டுப்

பாதையிலேயே போய்க்கொண்டிருந்தது. சந்திரகிரிக்குச் செல்லும் சரியான பாதை எதுவென்றே விளங்கவில்லை. அந்த இளைஞனுடைய முறுக்கிய கையை விமலன் விடவும் இல்லை. வெகு நேரம் கழித்த பிறகுதான், விமலனுக்கு வேறு ஓர் உண்மை மெல்லப் புரியலாயிற்று. அவை இளைஞனுடைய கைகளாக இல்லை.

வளையல்கள் அணிந்திருக்க வேண்டிய கைகள் என்பது போகப் போக நன்ருகத் தெரிந்தது. கைகள் இரண்டும் கரு ரத்தம் கட்டிப் போய்க் கன்றிவிட்டன. ஆயினும் இளைஞன் போன்றிருந்த அந்தப் பெண் வாயை விட்டுக் கத்தவில்லை. உண்மையில் ஒரு

பெண்ணினால் எப்படி இத்தகைய சாகஸத்தைச் செய்ய முடியும்? விமலனுக்கு வியப்பாக இருந்தது. பிறகு அந்த வியப்பே மெல்லப் பரிதாபமாகவும் மாறியது.

''நான் முதலில் ஏமாந்து விட்டேன். நீ ஒரு பெண் என்று தெரிந்திருந்தால், உன்னைத் தூக்கி வந்திருக்கவே மாட்டேன்'' என்றான் விமலன்.

அந்தப் பெண் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மேலும் கொஞ்ச தூரம் போனதும், ''உனக்குச் சரியான வழி தெரிந்தால் சொல்லேன். இப்படி இந்தக் காட்டையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறோமே!'' என்றான் விமலன்.

அவள் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. முகத்தை வேறு புறமாகத் திருப்பிக்கொண்டாள்.

''நீ அவ்வளவு இறுமாப்பாகப் பேசினாயே, இப்பொழுது அந்தப் பேச்செல்லாம் போன விடம் எங்கே, அம்மணி?'' என்றான் விமலன். அவனுடைய கைப்பிடி நழுவியது.

அடுத்த நிமிஷம் அவள் கைகளைத் திமிறிக்கொண்டு குதிரையை விட்டுக் கீழே குதித்தாள்.

''நீங்கள் பெரிய வீரர் அல்லவா, வீரர்? நாலு பேரைக் கண்டு ஓடி வந்த வீரர்! அதுவும் ஒரு பெண்ணை அபகரித்துக்கொண்டு வந்த வீரர்'' என்று முகம் சிவக்கக் கூறினாள்.

''நீ ஒரு பெண் என்று தெரிந்திருந்தால் உன்னைத் தொட்டிருக்கவே மாட்டேன்!'' என்றான் விமலன்.

''ஓஹோ! தெரிந்த பிறகு விட்டு விட்டீர்களோ? உங்களுடைய பயத்தில் உங்களுக்குத் தலை கால் தெரியவில்லை. இப்படிப் பயந்து ஓடியவருக்குத்தான் ஒரு ராஜ குமாரி அதுவும் ஒரு சக்கரவர்த்தியின் மகள் மாலையிட வேண்டுமாக்கும்! அப்படித்தானே ஆசை?''

விமலனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தப் பெண்ணுடைய வார்த்தைகள் அவன் இருதயத்தை வேல்கொண்டு தாக்கின.

''பயந்து ஓடுகிற ஓட்டத்துக்குப் பரிசு வைத்தால், முதல் பரிசு வேறு யாருக்கும் கிடைக்காது. உங்களுக்குத்தான் கிடைக்கும்! இல்லையா, ராஜாதி ராஜ விமலாதித்த ராஜகுமாரரே!''

அந்தப் பெண்ணுடைய கேலிக் குரல் ஆயிரம் வாள் முனையை விடக் கூர்மையாக அவனைத் தாக்கியது. ''என்ன, என் பெயர் அதுவென்று உனக்குச் சொன்னது யார், பெண்ணே?'' என்றான் விமலன். வாளை உருவப்போன கை, வெட்கித் தயங்கியது.

''பெண்ணே! ஹ்ஹ்ஹா! பெண்ணே! ஹஹ்ஹா!'' என்று அவன் மாதிரியே சொல்லிக் காட்டி அவள் கலகலவென்று நையாண்டியாகச் சிரித்தாள்.

விமலன் இவளை என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றான்.

''என்ன சிலைபோல் திகைத்து விட்டீர்களே! சாதாரணப் பெண் அல்ல; ராஜகுமாரரே! நானும் உங்களைப்போன்ற ராஜ வம்சத்துப் பெண்தான். ராஜகுமாரி இந்துமதி தெரியுமா, சந்திரவர்ம ராஜனின் ஒரே புதல்வி?''

''ஆமாம்..''

''அவளேதான் நான்!'' என்று மிகவும் அலட்சியமாகச் சொல்லி விட்டு, தன் தலைப்பாகையை எடுத்துப் போட்டாள்!

''ஆ! என்ன?'' என்று விமலன் வாயைப் பிளந்தான். அவன் முகத்தில் ஈயாடவில்லை. (தொடரும்)

க்விஸ் விடை

1. ஸ்கவு[illegible] குளோபர் [illegible] பூச்சி பிடிக்[illegible] பௌகோளா-[illegible] பாதங்கள். 5. நெற்கதிர். 6. அல்சேஷியன் நாய். 7. அரி நெல்லிக்கனி. 8. டிராக்டர்,

சென்ற இதழில் வெளியான என் வயது விடை:

7 வயது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM, AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

குழந்தைகள் நாடக விழா

மாம்பலம் ஹிந்தி பிரசார சபை மண்டபத்தில்

ர ா ஜ ா ஜி

துவக்கி வைக்கிறார்

24-3-55 வியாழக்கிழமை மாலை 6 மணி.

1. **பிச்சைக்கார ராஜா**
   (சிவாஜி சாரணர் சங்கம், மயிலாப்பூர்)
2. **சோணகிரி**
   (ஸ்ரீ கற்பகவல்லி பாலிகா பால பாடசாலை, மயிலாப்பூர்)

25-3-55 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி.

3. **தங்கக் குழந்தைகள்**
   (நகராண்மைக் கழகப் பாடசாலை, கல்மண்டபம், ராயபுரம்)
4. **சாயம் வெளுத்தது!**
   [பாரதி கலைக் கழகம் (பாலர் பகுதி) சைதாப்பேட்டை]

26-3-55 சனிக்கிழமை மாலை 6 மணி.

5. **அன்னை சொல் அமிர்தம்**
   (அடையாறு சிறுவர் சங்கம், அடையாறு)
6. **கருணை உள்ளம்**
   (மகாத்மாஜி சேவா சங்கம், திருவல்லிக்கேணி)

18 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியர்க்கு
ஒரு நாளைக்கு 4 அணா; 3 நாட்களுக்கும் 8 அணா

நடத்துவோர்: **குழந்தை எழுத்தாளர் சங்கம்,** சென்னை-17

கண்ணன்

அதிருஷ்ட நம்பர்கள்

இந்த இதழில் பொருளடக்கத்துக்கு மேலே ஒரு நம்பர் அச்சிடப்பட்டிருக்கிறது. அந்த நம்பர் அதிருஷ்ட நம்பராக இருக்கலாம். எல்லாக் கண்ணன் இதழ்களுக்கும் ஒவ்வொரு நம்பர் உண்டு. அவற்றில் பத்து நம்பர்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட நம்பர்கள். அந்த அதிருஷ்ட நம்பருள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

பரிசு விவரம்

முதல் பரிசு	ரூ. 15/-
இரண்டாம் பரிசு	ரூ. 10/-
மூன்றாம் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா)	ரூ. 5/- வீதம்
நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா)	ரூ. 2/- வீதம்
மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு	ரூ. 50/-

உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்

Reg. No. M. 5542

புதிய கண்ணன் வெளியீடுகள்

★ அசட்டுப் பிச்சு - 'ஆர்வி' எழுதியது

ஏ. பி. என்றால் ஐயாசாமி அவர்களுடைய மகன் பிச்சுமணி என்பவனைத்தான் குறிக்கும். ஆனால் ஏ - என்றால் அசடு, பி - என்றால் பிச்சு என்று ஆகி மற்ற ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் அவனை அசட்டுப் பிச்சு வாக்கிவிட்டார்கள். அவனுடைய தோற்றம், உடை, பேச்சு இவற்றிற்கும் அவனுடைய பெயருக்கும் அடடா, எத்தனை பொருத்தம்! ஆனால்,— அவனுடைய அதிருஷ்டம் இருக்கிறதே, அதை மட்டும் யாராலும் மாற்றவே முடியவில்லை. பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த், புலிக்குட்டி, குடுமி வைத்தி இவர்களுக்கு எல்லாம் அசட்டுப் பிச்சு ஒரு பெரிய புதிராகவே ஆகிவிட்டான். பெரிய பெரிய திருட்டுக் கேஸ்களையெல்லாம் அசட்டுப் பிச்சு அநாயாசமாகக் கண்டுபிடித்து விடுகிறான். காணாமல் போன பெண், அகப்படாத பக்காத் திருடன் இவர்களையெல்லாம் பிடித்துக் கொடுத்த அசட்டுப் பிச்சு இன்ஸ்பெக்டர் குருப்பின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி, அதன் மூலம் நம்முடைய அபிமானத்துக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகிவிடுகிறான். அருமையான சம்பாஷணைகள்; அடுக்கடுக்கான சம்பவங்கள்; சுவையான கதைப் போக்கு - எல்லாம் நிறைந்த இனிய புத்தகம் அசட்டுப் பிச்சு. 128 பக்கங்கள்.

விலை ரூ. 1/-

★ தூங்கும் அழகி - சித்திரத் தொடர்கதை

ராஜாவுக்கு வெகுநாளாகக் குழந்தை இல்லையே என்று வருத்தம். கடைசியில் ஒரு மகானுடைய அருளால் ஓர் அழகான பெண் குழந்தை பிறக்கிறது. அந்தக் குழந்தையை ராஜாவுடைய இளைய சகோதரன் மந்திரவாதியின் உதவி கொண்டு காணாமல் அடித்துவிடுகிறான். பதினாறு வருஷங்களாக அவள் இருக்குமிடத்தையே ஒருவராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. சாப்பிடும் நேரம் போக மீதி நேரங்களில் தூங்கிக் கொண்டே யிருந்த அந்த அழகியைக் கடைசியில் பாலகன் என்பவன் மீட்டுக்கொண்டு வருகிறான். ஜின் தேவதையும் பிரம்ம ராட்சஸனும் வருகிற இந்தக் கதை அற்புதச் செயல்கள் நிறைந்த கதை. அழகான சித்திரங்ளாக நமது கருத்தைக் கவர்கின்றன.

விலை 4 அணா

★ நீச்சல் பழக்கம் - 'டிமான்ஸ்டிரேட்டர்'

நீச்சல் அபாயகரமான பயிற்சிதான். ஆனால் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய பயிற்சி. அதை எப்படிக் கற்றுக்கொள்ள வேண்டும்; எந்த மாதிரி கற்றுக்கொண்டால் சுலபமாகவும் அபாயமில்லாமலும் நன்றாகக் கற்றுக்கொள்ளலாம் என்பது இந்தப் புத்தகத்தில் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

விலை 3 அணா

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு

விவரங்களுக்கு:

கலைமகள் காரியாலயம் :: மயிலாப்பூர், சென்னை-4